Democratic Politics - I
ஜனநாயக அரசியல் - I

Semester - 1

CONTENTS

Chapter	Month	Page
CHAPTER 1 WHAT IS DEMOCRACY? WHY DEMOCRACY? மக்களாட்சி என்றால் என்ன? மக்களாட்சி ஏன் தேவை?	July ஜூலை	158
CHAPTER 2 CONSTITUTIONAL DESIGN அரசியலமைப்புச் சட்ட வடிவமைப்பு	September செப்டம்பர்	192
CHAPTER 3 ELECTORAL POLITICS தேர்தல் அரசியல்	October அக்டோபர்	224

I8P5M5
Student Corner

F6N7X2
Teacher Corner

AP SCERT

LEARNING OUT COMES

The Students will be able to

1. What is Democracy? Why Democracy?

1. Uderstand Democracy and its features.
2. Distinguish between different types of governments across the world.
3. Explain the differences between Democracy, Monarchy and Dictatorship.
4. Appreciate the Rule of Law and Rights.

2. Constitutional Design

1. Explain the concept of apartheid.
2. Understand the need of Constitution and the efforts in making the Constitution.
3. Compare and contrast the Indian Constitution with that of other countires.
4. Interpret the philosophy of the Constitution.
5. Describe the guiding values of the Indian Constitution and appreciate the efforts of the Constituent Assembly.

3. Electoral Politics

1. Understand the need and the role of elections in Democracy.
2. Analyse the process of elections and the role of Election Commission in taking decisions independently.
3. Difine the concept of citizenship.
4. Explain geographical importance of electoral constituencies.
5. Organise mock elections to elect class leaders and school pupils' leader.
6. Feel the sensitivity in facing the challanges in conducting free and fair elections.

AP – SCERT

கற்றல் விளைவுகள்

கற்போர்....

1. மக்களாட்சி என்றால் என்ன? மக்களாட்சி ஏன் தேவை?

1. மக்களாட்சியை பற்றியும் அதன் எதிர்காலம் குறித்து புரிந்து கொள்வர்.
2. உலகெங்கிலும் உள்ள பல்வேறு வகையான அரசாங்களை குறித்து பரிசீலனை செய்வர்.
3. மக்களாட்சி, முடியாட்சி மற்றும் சர்வாதிகார ஆட்சி ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளை விவரிப்பர்.
4. சம நியாயம் மற்றும் உரிமைகளை புகழ்வர்.

2. அரசியலமைப்புச் சட்ட வடிவமைப்பு

1. நிற வேற்றுமையை குறித்து விவரிப்பர்.
2. அரசியல் அமைப்பு சட்டத்தின் தேவையை மற்றும் அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியை புரிந்து கொள்வர்.
3. இந்திய அரசியல் அமைப்பை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டு பார்ப்பர்.
4. அரசியலமைப்பின் தத்துவத்தை விவரிப்பர்.
5. இந்திய அரசியல் அமைப்பின் வழிகாட்டு கொள்கைகளை விவரித்து, அரசியல் அமைப்பு சபையின் முயற்சிகளை பாராட்டுவர்.

3. தேர்தல் அரசியல்

1. மக்களாட்சியில் தேர்தலின் அவசியத்தையும் பங்கையும் புரிந்து கொள்வர்.
2. தேர்தலின் செயல்முறை மற்றும் சுயேட்சையான முடிவுகளை எடுப்பதில் தேர்தல் ஆணையத்தின் பங்கு குறித்து பகுப்பாய்வு செய்வர்.
3. குடியுரிமை பற்றிய கருத்தை வரையறுத்தல் செய்வர்.
4. வாக்காளர் தொகுதிகளின் புவியியல் முக்கியத்துவத்தை விளக்குவர்.
5. பள்ளிகளில் வகுப்பு தலைவன், பள்ளி மாணவர்களின் தலைவரை தேர்ந்தெடுக்க மாதிரி தேர்தல்களை நடத்துவர்.
6. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதில் எதிர் கொள்ளும் சவால்களை உணர்ந்து கொள்வர்.

AP SCERT

B2Q1V1

CHAPTER 1

What is Democracy? Why Democracy?

AP – SCERT

Overview

What is democracy? What are its features? This chapter builds on a simple definition of democracy. Step by step, we work out the meaning of the terms involved in this definition. The aim here is to understand clearly the bare minimum features of a democratic form of government. After going through this chapter we should be able to distinguish a democratic form of government from a non-democratic government. Towards the end of this chapter, we step beyond this minimal objective and introduce a broader idea of democracy.

Democracy is the most prevalent form of government in the world today and it is expanding to more countries. But why is it so? What makes it better than other forms of government? That is the second big question that we take up in this chapter.

D5Y7G5

பாடம் - 1

மக்களாட்சி என்றால் என்ன? மக்களாட்சி ஏன் தேவை?

AP - SCERT

மேற்பார்வை

மக்களாட்சி என்றால் என்ன? அதன் பண்புகள் யாவை? இந்த அத்தியாயம் மக்களாட்சியின் பொதுவான வரையறையைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. படிப்படியாக இந்த வரையறையில் உள்ள சொற்களின் பொருளை தெரிந்துகொள்ள முயல்வோம். மக்களாட்சி அரசாங்கத்தின் குறைந்தபட்ச பண்புகளைப் பற்றி தெளிவாக புரிந்துகொள்வது நம் இலட்சியமாகும். இந்த அத்தியாயத்தை படித்த பின் நாம் மக்களாட்சி அரசாங்கத்தை மக்களாட்சி அல்லாத அரசாங்கத்திடமிருந்து வேறுபடுத்த இயல வேண்டும். இந்த அத்தியாயத்தின் முடிவில் நாம் இந்த குறைந்தபட்ச நோக்கத்தைக் கடந்து மக்களாட்சியின் விரிவான கருத்துகளை அறிமுகப்படுத்தலாம்.

மக்களாட்சி என்பது இன்று உலகில் மிகவும் பிரபலமான அரசாங்க வடிவமாகும். இது பல நாடுகளுக்கு பரவுகிறது. ஆனால் அவ்வாறு ஏன் நடக்கிறது? பிற அரசாங்க அமைப்புகளைவிட மேன்மையானதாக இதனை எது மாற்றுகிறது? என்பதே இந்த அத்தியாயத்தில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய வினா.

1.1 What is Democracy?

You have already read about different forms of government. On the basis of your understanding of democracy so far, mentioning a few examples write down some common features of:

- Democratic governments
- Non-democratic governments

Why define democracy?

Before we proceed further, let us first take note of an objection by Merry. She does not like this way of defining democracy and wants to ask some basic questions. Her teacher Matilda Lyngdoh responds to her questions, as other classmates join the discussion:

Merry: Ma'am, I don't like this idea. First we spend time discussing democracy and then we want to find out the meaning of democracy. I mean logically shouldn't we have approached it the other way round? Shouldn't the meaning have come first and then the example?

Lyngdoh Madam: I can see your point. But that is not how we reason in everyday life. We use words like pen, rain or love. Do we wait to have a definition of these words before we use them? Come to think of it, do we have clear definition of these words? It is only by using a word that we understand its meaning.

Merry: But then why do we need definitions at all?

Lyngdoh Madam: We need a definition only when we come across a difficulty in the use of a word. We need a definition of rain only when we wish to distinguish it from, say, drizzle or cloudburst. The same is true for democracy. We need a clear definition only because people use it for different purposes, because very different kinds of governments call themselves democracy.

Ribiang: But why do we need to work on a definition? The other day you quoted Abraham Lincoln to us: "Democracy is government of the people, by the people and for the people". We in Meghalaya always ruled ourselves. That is accepted by everyone. Why do we need to change that?

Lyngdoh Madam: I am not saying we need to change it. I too find this definition very beautiful. But we don't know if this is the best way of defining unless we think about it ourselves. We must not accept something just because it is famous, just because everyone accepts it.

Yolanda: Ma'am, can I suggest something? We don't need to look for any definition. I read somewhere that **the word democracy** comes from a Greek word 'Demokratia'. In Greek 'demos' means people and 'kratia' means rule. So democracy is rule by the people. This is the correct meaning. Where is the need to debate?

Lyngdoh Madam: That is also a very helpful way of thinking about this matter. I would just say that this does not always work. A word does not remain tied to its origin. Just think of computers. Originally they were used for computing, that is to say calculating, very difficult mathematical sums. These were very powerful calculators. But nowadays very few people use computers for computing sums. They use it for writing, for designing, for listening to music and for watching films. Words remain the same but their meaning can change with time. In that case it is not very useful to look at the origins of a word.

Merry: Ma'am, so basically what you are saying is that there is no shortcut to our thinking about the matter ourselves. We have to think about its meaning and evolve a definition.

Lyngdoh Madam: You got me right. Let us get on with it now.

ACTIVITY

Let us take Lyngdoh Madam seriously and try to write down the exact definition of some of the simple words that we use all the time: pen, rain and love. For example, is there a way of defining a pen that distinguishes it clearly from a pencil, a brush, a chalk or crayon.

- What have you learnt from this attempt?
- What does it teach us about understanding the meaning of democracy?

I have heard a different version. Democracy is off the people, far (from) the people and (where they) buy the people. Why don't we accept that?

A simple definition

Let us get back to our discussion on similarities and differences among governments that are called

1.1 மக்களாட்சி என்றால் என்ன?

நீங்கள் ஏற்கனவே பல வகையான அரசாங்க முறைகளைப் பற்றி படித்திருப்பீர்கள். மக்களாட்சி மீது உங்களுக்கு உள்ள விழிப்புணர்வின் அடிப்படையில் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு

- மக்களாட்சி அரசாங்கங்கள்
- மக்களாட்சி அல்லாத அரசாங்கங்கள்

ஆகியவற்றின் சில பொதுவான பண்புகளை எழுதவும்.

மக்களாட்சியை ஏன் வரையறுக்க வேண்டும்?

நாம் மேலும் முன்னோக்கிச் செல்வதற்கு முன் முதலில் மெர்ரி என்பவரின் எதிர்ப்பினை கவனிக்க வேண்டும். இவ்வாறு மக்களாட்சியைப் பற்றி வரையறை செய்வது அவருக்கு பிடிக்காது. அவர் சில அடிப்படை வினாக்களை கேட்க விரும்புகிறார். அவருடைய வினாக்களுக்கு அவருடைய ஆசிரியை மடில்டா லிங்கோ பதிலளித்தார். சக மாணவர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மெர்ரி: மேடம் எனக்கு இந்த எண்ணம் பிடிக்கவில்லை. முதலில் நாம் மக்களாட்சி குறித்து நேரம் ஒதுக்கி, கலந்துரையாடிய பின் மக்களாட்சி என்றால் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதை என் கருத்தில் வேறு முறையில் அணுகக்கூடாதா? முதலில் வரையறை செய்ததின் எடுத்துக்காட்டு இருக்க வேண்டுமல்லவா?

லிங்டோ மேடம்: நான் உன் கருத்தினை புரிந்துக்கொள்கிறேன். ஆனாலும் அன்றாட வாழ்க்கையில் நாம் சிந்திக்கும் முறை இது அல்ல, நாம் பேனா, மழை அல்லது அன்பு போன்ற சொற்களை பயன்படுத்துகிறோம். இச்சொற்களை பயன்படுத்துவதற்கு முன் அவற்றின் வரையறைக்காக காத்திருப்போமா? சற்று சிந்திக்கவும், இச்சொற்களுக்கு தெளிவான வரையறை உள்ளதா? ஒரு சொல்லை பயன்படுத்தும்போது தான் அதன் பொருளை புரிந்துகொள்கிறோம்.

மெர்ரி: நமக்கு வரையறைகள் ஏன் தேவை?

லிங்டோ மேடம்: ஒரு சொல்லைப் பயன்படுத்தும்போது தடங்கல் ஏற்படும் போது தான் நமக்கு அதன் வரையறை தேவைப்படும். தூறல் மேக வெடிப்பு போன்றவற்றிலிருந்து மழையை வேறுபடுத்தும் போது தான் நமக்கு மழைக்கான வரையறை தேவைப்படும். மக்களாட்சி என்னும் சொல்லிற்கும் அது பொருந்தும். ஏனெனில் மக்கள் அதை பல்வேறு வகைகளில் பயன்படுத்துவதாலும் பல்வேறு வகையான அரசாங்கங்கள் தங்களை தாங்களே மக்களாட்சி அரசாங்கம் என்று கூறிக் கொள்வதாலும் நமக்கு தெளிவான வரையறை தேவைப்படுகிறது.

ரியாங்: ஆனால் நாம் வரையறை மீது இவ்வளவு அக்கறை செலுத்தவேண்டுமா? வேறொரு சமயத்தில் நீங்கள் ஆபிரகாம் லிங்கனின், “மக்களால், மக்களுக்காக, மக்களின் ஆட்சியே மக்களாட்சி” என்று கூறினீர்கள். நாம் மேகாலயாவில் எப்போதும் நம்மை நாமே ஆண்டு வருகிறோம். இதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். இதை நாம் ஏன் மாற்ற வேண்டும்?

லிங்டோ மேடம்: இதை மாற்ற வேண்டும் என்று நான் கூறவில்லை. இந்த வரையறை மிகவும் அழகாக உள்ளது என்று நானும் கருதுகிறேன். ஆனால் நாமே இதைப்பற்றி சிந்திக்காமல் இதுவே சிறந்த வரையறை என்று கூற இயலாது. இது மிகவும் பிரபலமடைந்தால் அனைவரும் இதனை ஏற்கிறோம். எனவே நாம் அதை ஏற்க வேண்டிய அவசியமில்லை.

யோலந்தா : மேடம் நான் என் கருத்தை கூறட்டுமா? நாம் எந்த வரையறையையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. மக்களாட்சி என்னும் சொல் கிரேக்க சொல்லான ‘டிமோகிரேசியா’, விலிருந்து தோன்றியதாக நான் படித்திருக்கிறேன். கிரேக்க மொழியில் டிமோ என்னும் சொல் மக்களையும் கிரேசியா என்னும் சொல் ஆட்சியையும் குறிக்கின்றன. எனவே மக்களாட்சி என்பதற்கு மக்களால் ஆளப்படும் ஆட்சி என்று பொருள் கூறலாம். இதுவே சரியான பொருளாகும். இனி கலந்துரையாடல் ஏன் தேவை?

லிங்டோ மேடம் : இக்கருத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு இது மிகவும் துணையாக இருக்கும். ஆனால் இது எப்போதும் பணியாற்றாது என்று நான் கருதுகிறேன். ஒரு சொல் அதன் மூலப்பொருளுடன் மட்டுமே வரம்புக்கு உட்பட்டிருக்காது. கணிணிகளைப் பற்றி சிந்தியுங்கள். முதலில் அவற்றை கணக்கிடுவதற்கு மட்டுமே பயன்படுத்தினர். மிகக் கடினமான கணக்குகளை தீர்வு செய்வதற்கு இவை மிகவும் ஆற்றல் மிக்க கணிப்பான் களாகும். ஆனால் தற்காலத்தில் மிகச் சிலரே இதை கணக்கிடுவதற்கு பயன்படுத்துகின்றனர். அவர்கள் இதை எழுதுவதற்கும் வடிவமைப்புகள் செய்வதற்கும், இசையை கேட்பதற்கும், திரைப்படங்களைக் காணவும் பயன்படுத்து கின்றனர். சொற்கள் அவ்வாறே இருக்கும். ஆனால் அவற்றின் பொருள் காலப்போக்கில் மாறலாம் அந்நேரத்தில் அச்சொல்லின் பொருள் அதன் மூலப்பொருளுடன் மட்டுமே வரம்புக்குட் படுவது சரியானதல்ல.

மெர்ரி : மேடம், நாம் சொற்களின் விரிவான பொருளை பார்க்கவேண்டிய அவசியமுள்ளது என்பது உங்கள் நோக்கமல்லவா!

லிங்டோ மேடம் : நீங்கள் என்னை நன்றாக புரிந்துகொண்டீர்கள். நாம் இப்பொருளுடன் முன்னோக்கிச் செல்வோம்.

செயல்பாடு

நாம் லிங்டோ மேடம் கூறிய கருத்தை கவனமாக ஆராய்ந்து அன்றாடம் பயன்படுத்தும் பேனா மழை, அன்பு போன்ற பொதுவான சொற்களின் சரியான வரையறையை எழுதுவதற்கு முயற்சிப்போம். எடுத்துக்காட்டாக பேனாவை வரையறை செய்வதற்கு பென்சில், தூரிகை, சுண்ணக்கட்டி அல்லது கிரேயானிலிருந்து தெளிவாக வேறுபடுத்தும் வழிமுறை ஏதேனும் உள்ளதா?

- இம்முயற்சியிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- மக்களாட்சி என்பதன் பொருளை புரிந்து கொள்வதற்கு இது எவ்வாறு பயன்படுகிறது?

நான் வேறொரு வரையறையை கேள்வியுற்றேன் ‘மக்களாட்சி மக்களுடன் தொடர்பில்லாமல் மக்களுக்கு தூரமாக இருந்து மக்களை விலைக்கு வாங்குவது’ என்று நாம் இதை ஏன் ஒப்புக்கொள்வதில்லை.

ஒரு பொதுவான வரையறை

மக்களாட்சி அரசாங்கங்கள் என அழைக்கப்படும் அரசாங்கங்களுக்கிடையே ஒற்றுமை, வேற்றுமை மீது

democracies. One simple factor common to all democracies is: the government is chosen by the people. We could thus start with a simple definition: **democracy is a form of government in which the rulers are elected by the people**.

This is a useful starting point. This definition allows us to separate democracy from forms of government that are clearly not democratic. The army rulers of Myanmar were not elected by the people. Those who happened to be in control of the army became the rulers of the country. People had no say in this decision. Dictators like Pinochet (Chile) are not elected by the people. This also applies to monarchies. The kings of Saudi Arabia rule not because the people have chosen them to do so but because they happen to be born into the royal family.

This simple definition is not adequate. It reminds us that democracy is people's rule. But if we use this definition in an unthinking manner, we would end up calling almost every government that holds an election a democracy. That would be very misleading. As we shall find out in Chapter 3, every government in contemporary world wants to be called a democracy, even if it is not so. That is why we need to carefully distinguish between a government that is a democracy and one that pretends to be one. We can do so by understanding each word in this definition carefully and spelling out the features of a democratic government.

CHECK YOUR PROGRESS

Ribiang went back home and collected some more famous quotations on democracy. This time she did not mention the names of the people who said or wrote these. She wants you to read these and comment on how good or useful these thoughts are:

- Democracy gives every man the right to be his own oppressor.
- Democracy consists of choosing your dictators after they've told you what you think it is you want to hear.
- Man's capacity for justice makes democracy possible, but man's inclination to injustice makes democracy necessary
- Democracy is a device that insures we shall be governed no better than we deserve.
- All the ills of democracy can be cured by more democracy.

read the cartoon

This cartoon was drawn when elections were held in Iraq with the presence of US and other foreign powers. What do you think this cartoon is saying? Why is 'democracy' written the way it is?



©Stephane Peray, Thailand, Cagle Cartoons Inc.

AP – SCERT

விவாதத்திற்கு திரும்புவோம். அனைத்து மக்களாட்சிகளுக்கும் உள்ள ஒரு பொதுவான கருத்து யாதெனில் இதில் மக்களே அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பர். அவ்வாறு மக்களாட்சி என்பது ஆட்சியாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கமுறை என்னும் ஒரு பொதுவான வரையறையுடன் நாம் தொடங்குவோம்.

இது ஒரு நல்ல தொடக்கமாகும். இந்த வரையறை நமக்கு மக்களாட்சியை மக்களாட்சிஅல்லாத அரசாங்கங்களில் இருந்து வேறுபடுத்துவதற்கு வாய்ப்பளிக்கிறது. மியான்மர் இராணுவ ஆட்சியாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. இராணுவத்தை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்ட இவர்கள் நாட்டின் ஆட்சியாளர்களாயினர். இம்முடிவின் மீது மக்களுக்கு எவ்வித பங்கும் இல்லை. சிலியின் சர்வாதிகாரியான பினோசெட் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது முடியாட்சிக்கும் பொருந்தும். சௌதி அரேபியாவின் அரசர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டை ஆள்வதில்லை. அவர்கள் அரச குடும்பத்தில் பிறப்பதால் ஆட்சிக்கு வருகின்றனர்.

இந்த எளிய வரையறை போதுமானதாக இல்லை. இது நமக்கு மக்களாட்சி என்பது மக்களின் ஆட்சி என்பதை நினைவூட்டுகிறது. ஆனால் நாம் இவ்வரையறையை சிந்திக்காத முறையில் பயன்படுத்தினால் தேர்தலை நடத்தும் ஒவ்வொரு அரசாங்கமும் மக்களாட்சி என்று அழைப்பதை நாம் நிறுத்திக்கொள்வோம் அது மிகவும் தவறாக வழிநடத்தும். தான் ஒரு மக்களாட்சியாக இல்லாவிட்டாலும் மக்களாட்சி அரசாங்கம் என அழைக்கப்பட வேண்டுமென்று ஒவ்வொரு அரசாங்கமும் விரும்புகிறது என்று 3வது அத்தியாயத்தில் நாம் படிக்கலாம். எனவே ஒரு மக்களாட்சி அரசாங்கத்திற்கு, மக்களாட்சியாக நடிக்கும் அரசாங்கத்திற்குமிடையே உள்ள வேறுபாட்டை நாம் எச்சரிக்கையுடன் கண்டறிய வேண்டும். இவ்வரைறறையில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் கவனமாக புரிந்துகொள்ளுதல்மக்களாட்சி அரசாங்கத்தின் பண்புகளை விவரித்தல் வாயிலாக நாம் இதைச் செய்யலாம்.

உங்களுடைய முன்னேற்றத்தை சோதித்து கொள்ளுங்கள்

ரிபியாங் வீட்டிற்கு திரும்பிச் சென்று மேலும் சில புகழ்மிக்க வரையறைகளை சேகரித்தாள், இம்முறை அவற்றை கூறியவர்களின் பெயர்களையோ அல்லது அவற்றை இயற்றியவர்களின் பெயர்களையே கூறவில்லை. நீங்கள் இவற்றைப் படித்து இச்சிந்தனைகள் எவ்வளவு நல்லதோ அல்லது பயனுள்ளதோ என தெரிவிக்க வேண்டும் என்று அவள் கூறினாள்.

- ஒவ்வொரு நபரும் தன் எதிர்காலத்தை தானே அமைத்துக் கொள்ளும் உரிமையை மக்களாட்சி வழங்குகிறது.
- சர்வாதிகாரிகள் ஆணைப்படி அவர்களை தேர்ந்தெடுப்பதே மக்களாட்சி. உன் மனதில் இருப்பதை பிறரிடமிருந்து கேட்க வேண்டுமென்று விரும்புகிறாய்.
- நீதிக்காக போராடும் மனிதரின் திறமை மக்களாட்சிக்கு வாய்ப்பளிக்கிறது. ஆனால் அநீதியின் பக்கம் திரும்பும்போது அங்கே மக்களாட்சி அவசியமாகிறது.
- மக்களாட்சியில் நம் எண்ணத்திற்கேற்ப அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
- மக்களாட்சியில் உள்ள அனைத்து குறைகளையும் மக்களாட்சி வாயிலாகவே தீர்த்து கொள்ளலாம்.

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்

ஈராக்கில் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளின் முன்னிலையில் தேர்தல் நடந்தபோது இந்த கேலிச் சித்திரம் வரையப்பட்டது. இக் கேலிச் சித்திரம் என்ன தெரிவிக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? மக்களாட்சி அவ்வாறு ஏன் எழுதப்பட்டது?



©Stephane Peray, Thailand, Cagle Cartoons Inc.

1.2 Features of democracy

We have started with a simple definition that **democracy is a form of government in which the rulers are elected by the people**. This raises many questions:

- Who are **the rulers** in this definition? Which officials must be elected for any government to be called a democracy? Which decisions may be taken by non-elected officials in a democracy?
- What kind of **election** constitutes a democratic election? What conditions must be fulfilled for an election to be considered democratic?
- Who are **the people** who can elect the rulers or get elected as rulers? Should this include every citizen on an equal basis? Can a democracy deny some citizens this right?
- Finally, what kind of a **form of government** is democracy? Can elected rulers do whatever they want in a democracy? Or must a democratic government function with some limits? Is it necessary for a democracy to respect some rights of the citizens?

Let us consider each of these questions with the help of some examples.

Major decisions by elected leaders

In Pakistan, General Pervez Musharraf led a military coup in October 1999. He overthrew a democratically elected government and declared himself the 'Chief Executive' of the country. Later he changed his designation to President and in 2002 held a **referendum** in the country that granted him a five-year extension. Pakistani media, human rights organisations and democracy activists said that the referendum was based on

©Emad Hajjaj, Jordan, Cagle Cartoons Inc. 7 June 2005

read the cartoon

Syria is a small west Asian country. The ruling Ba'ath Party and some of its small allies are the only parties allowed in that country. Do you think this cartoon could apply to China or Mexico? What does the crown of leaves on democracy signify?

1.2 மக்களாட்சி பண்புகள்

மக்களாட்சி என்பது "மக்களால் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசாங்க அமைப்பு" என்னும் பொதுவான ஒரு வரையறையுடன் நாம் தொடங்கினோம். இது பால வினாக்களை எழுப்புகிறது.

- இவ்வரையரையில் ஆட்சியாளர்கள் யார்? எந்த ஒரு அரசாங்கமெனினும் மக்களாட்சி என்று அழைக்கப்படவேண்டுமெனில் எந்த அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? தேர்ந்தெடுக்கப்படாத அதிகாரிகள் மக்களட்சியில் என்ன முடிவுகளை எடுப்பர்?
- மக்களாட்சி தேர்தல்களில் எவ்வகையான தேர்தல்கள் இருக்கும்? ஒரு தேர்தல் மக்களாட்சி அடிப்படையிலானது என்று கருதப்படவேண்டுமெனில் என்னென்ன விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்?
- ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கக்கூடிய அல்லது ஆட்சியாளர்களாக தேர்ந்தெடுக் கப்படக்கூடிய நபர்கள் யார்? இதில் ஒவ்வொரு குடிமகனையும் சமமாக பார்க்க வேண்டுமா? மக்களாட்சி குடிமக்களுக்கு இந்த உரிமையை நிராகரிக்க இயலுமா?
- இறுதியாக மக்களாட்சி என்பது எவ்வகை அரசாங்க வடிவம்? மக்களாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் தங்கள் விருப்பப்படி செய்வார்களா? அல்லது

மக்களாட்சி அரசாங்கம் சில வரம்புகளுக்குட் பட்டு பணியாற்றவேண்டுமா?

சில எடுத்துக்காட்டுகளின் உதவியுடன் இவ்வினாக்களில் ஒவ்வொன்றையும் உற்றுநோக்குவோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை கொண்டு முக்கிய முடிவுகளை எடுத்தல்.

பாகிஸ்தானில் பர்வேஜ் முசாரப் 1999 அக்டோபரில் இராணுவப் புரட்சிக்கு தலைமை வகித்தார். மக்களாட்சியடிப்படையில் தேர்ந்தெடுத்த அரசாங்கத்தை நீக்கிவிட்டு தன்னைத் தானே முக்கிய ஆட்சியாளராக அறிவித்துக்கொண்டார். பின்னர் தன் தகுதியை அதிபர் என்று மாற்றிக்கொண்டார். 2002ல் நாட்டில் மக்கள் கருத்து சேகரிப்பை நடத்தினார். அது அவருக்கு ஐந்தாண்டு கால பதவி நீட்டிப்பை வழங்கியது. பாகிஸ்தான் ஊடகங்கள், மனித உரிமை நிறுவனங்கள், மக்களாட்சி செயலாளர்கள், மக்கள் சேகரிப்பில் அநீதி மற்றும் மோசடி நடந்தன என்று கூறின.



©Emad Hajjaj, Jordan, Cagle Cartoons Inc. 7 June 2005

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்

சிரியா ஒரு சிறிய மேற்காசிய நாடு, அந்நாட்டில் ஆட்சியிலுள்ள பாத் கட்சியும் அதன் சில கூட்டணி கட்சிகளும் மட்டுமே அனுமதிக்கப் பட்டுள்ளன. இக்கேலிச் சித்திரம் சீனா அல்லது மெக்சிகோவிற்கும் பொருந்தும் என்று நினைக்கிறாயா? மக்களாட்சியின் மீதுள்ள இலைக் கிரீடம் எதைக் குறிப்பிடுகிறது?

read the cartoon

This cartoon was drawn in the context of Latin America. Do you think it applies to the Pakistani situation as well? Think of other countries where this could apply? Does this happen sometimes in our country as well?



©Ares, Caglecartoon.com, Cagle Cartoons Inc. 22 January 2005

All this is so remote for me. Is democracy all about rulers and governments? Can we talk about a democratic classroom? Or a democratic family?

malpractices and fraud. In August 2002 he issued a 'Legal Framework Order' that amended the Constitution of Pakistan. According to this Order, the President can dismiss the national and provincial assemblies. The work of the civilian cabinet is supervised by a National Security Council which is dominated by military officers. After passing this law, elections were held to the national and provincial assemblies. So Pakistan has had elections, elected representatives have some powers. But the final power rested with military officers and General Musharraf himself.

Clearly, there are many reasons why Pakistan under General Musharraf should not be called a democracy. But let us focus on one of these. Can we say that the rulers are elected by the people in Pakistan? Not quite. People may have elected their representatives to the national and provincial assemblies but those elected representatives were not really the rulers. They cannot take the final decisions. The power to take final decision rested with army officials and with General Musharraf, and none of them were elected by the people. This happens in many dictatorships and monarchies. They formally have an elected parliament and government but the real power is with those who are not elected. In a few countries, the real power was with some external powers and not with locally elected representatives. This cannot be called people's rule.

This gives us the first feature. **In a democracy the final decision-making power must rest with those elected by the people**.

Free and fair electoral competition

In China, elections are regularly held after every five years for electing the country's parliament, called Quanguo Renmin Daibiao Dahui (National People's Congress). The National People's Congress has the power to appoint the President of the country. It has nearly 3,000 members elected from all over China. Some members are elected by the army. Before contesting elections, a candidate needs the approval of the Chinese Communist Party. Only those who are members of the Chinese Communist Party or eight smaller parties allied to it were allowed to contest elections held in 2002-03. The government is always formed by the Communist Party.

Since its independence in 1930, Mexico holds elections after every six years to elect its President. The country has never been under a military or dictator's rule. But until 2000 every election was won by a

கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்.

இக்கேலிச்சித்திரம் இலத்தீன் அமெரிக்காவின் பின்புலத்தில் வரையப்பட்டது இது பாகிஸ்தான் சூழ்நிலைக்கும் பொருந்தும் என நினைக்கிறாயா? இது பொருந்தக்கூடிய வேறு நாடுகளைப் பற்றி சிந்திக்கவும், நம் நாட்டிலும் இது சில காலம் நடந்ததா?

©Ares, Caglecartoon.com, Cagle Cartoons Inc. 22 January 2005

ஆகஸ்டு 2002ல் அவர் திருத்தப்பட்ட பாகிஸ்தான் அரசியலமைப்பு சட்டப்படியான வடிவமைப்பு ஆணையை வெளியிட்டார். இந்த ஆணையின்படி நாட்டின் அதிபர் தேசிய, வட்டார சட்ட சபைகளை ரத்து செய்யலாம். குடிமக்களுக்குரிய மந்திரிசபையின் பணியை இராணுவ அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய பாதுகாப்புக் குழு மேற்பார்வையிடலாம். இச்சட்டத்தைக் கொண்டுவந்தபின் தேசிய மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. பின்னர் பாகிஸ்தானில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆனால் இறுதியான அதிகாரம் இராணுவ அதிகாரிகள் மற்றும் ஜெனரல் முசாரப்பிற்கே இருந்தது.

ஜெனரல் முசாரப்பின் தலைமையிலான பாகிஸ்தானை மக்களாட்சி என்று கருதாததற்கு பல காரணங்கள் உள்ளன என்பது தெளிவாகிறது. ஆனால் இவற்றில் ஒன்றின்மீது கவனம் செலுத்தலாம். பாகிஸ்தானில் ஆட்சியாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று நாம் கூற இயலுமா? முற்றிலுமாக இயலாது. மக்கள் தேசிய, மாகாண சட்ட சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உண்மையான ஆட்சியாளர்கள் அல்லர். அவர்களால் இறுதியான முடிவை எடுக்க இயலாது. இறுதியான அதிகாரம் இராணுவ அதிகாரிகள் மற்றும் ஜெனரல் முசாரப்பிற்கே இருந்தது. அவர்களில் யாரும் மக்களால் தேர்ந்தெடுக்கப் படவில்லை. பல்வேறு சர்வாதிகார ஆட்சிகளிலும் முடியாட்சிகளிலும் இதுவே நடைபெறுகிறது. அவர்களுக்கு முறையான தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றமும் அரசாங்கமும் இருப்பினும் உண்மையான அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தவர்களிடமே உள்ளது. சில நாடுகளில் உண்மையான அதிகாரம் அயல் நாட்டு சக்திகளிடம் உள்ளது. உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இல்லை. இது மக்களாட்சி என்று கருதப்படாது. இது நமக்கு முதல் பண்பினைத் தருகிறது. மக்களாட்சியில் இறுதியாக முடிவு எடுக்கும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமே இருத்தல் வேண்டும்.

இவை அனைத்தும் எனக்கு எட்டாததாகவே உள்ளது மக்களாட்சி என்பது ஆட்சியாளர்கள் மற்றும் அரசாங்கங்கள் பற்றியதுதானா? நாம் ஒரு மக்களாட்சி வகுப்பறை அல்லது ஒரு மக்களாட்சி குடும்பத்தைப்பற்றி பேசலாமா?

சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறும் தேர்தல் போட்டி

சீனாவில் குவாங்வோ ரென்மின் தைபியாவோ தஹு (தேசிய மக்கள் காங்கிரஸ்) என்று அழைக்கப்படும் தேசிய பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. நாட்டின் அதிபரை நியமிக்கும் அதிகாரம் தேசிய மக்கள் காங்கிரசுக்கு உள்ளது. இதில் சீனாவின் நான்கு திசைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 3000 உறுப்பினர்கள் இருப்பர். சில உறுப்பினர்கள் இராணுவத்தால் தேர்ந்தெடுக்கப்படுவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன் வேட்பாளருக்கு சீன கம்யூனிஸ்டு கட்சியின் ஒப்புதல் தேவை. சீன கம்யூனிஸ்டு கட்சி மற்றும் அதனுடன் கூட்டணி வைத்திருந்த 8 சிறு கட்சிகளில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் மட்டுமே 2002-03ல் நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட அனுமதிக்கப்பட்டனர். அரசாங்கமானது எப்போதும் கம்யூனிஸ்டு கட்சி வாயிலாகவே ஏற்படுத்தப்படும்.

1930ல் விடுதலை பெற்றதிலிருந்து மெக்சிகோ தன் அதிபரை தேர்ந்தெடுப்பதற்கு ஒவ்வொரு ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்களை நடத்துகிறது. நாடு எப்போது இராணுவ அல்லது முடியாட்சியின் கீழ் இருந்ததில்லை. ஆனால் 2000வது ஆண்டுவரை ஒவ்வொரு தேர்தலிலும் P.R.I (Institutional Revolutionary Party) வெற்றிபெற்றது. எதிர் கட்சிகள்

party called PRI (Institutional Revolutionary Party). Opposition parties did contest elections, but never managed to win. The PRI was known to use many dirty tricks to win elections. All those who were employed in government offices had to attend its party meetings. Teachers of government schools used to force parents to vote for the PRI. Media largely ignored the activities of opposition political parties except to criticise them. Sometimes the polling booths were shifted from one place to another in the last minute, which made it difficult for people to cast their votes. The PRI spent a large sum of money in the campaign for its candidates.

Should we consider the elections described above as examples of people electing their rulers? Reading these examples we get a sense that we cannot. There are many problems here. In China the elections do not offer the people any serious choice. They have to choose the ruling party and the candidates approved by it. Can we call this a choice? In the Mexican example, people seemed to really have a choice but in practice they had no choice. There was no way the ruling party could be defeated, even if people were against it. These are not fair elections.

We can thus add a second feature to our understanding of democracy. Holding elections of any kind is not sufficient. The elections must offer a real choice between political alternatives. And it should be possible for people to use this choice to remove the existing rulers, if they wish so. So, **a democracy must be based on a free and fair election where those currently in power have a fair chance of losing**. We shall find out more about a democratic election in Chapter 3.

©Nerilicon, *El Economista* , Mexico, Cagle Cartoons Inc. 17 May 2005

read the cartoon

This cartoon was titled 'Building Democracy' and was first published in a Latin American publication. What do moneybags signify here? Could this cartoon be applied to India?

One person, one vote, one value

Earlier, we read about how the struggle for democracy was linked to the demand for universal adult franchise. This principle has now come to be accepted almost all over the world. Yet there are many instances of denial of equal right to vote.

- Until 2015, in Saudi Arabia women did not have the right to vote.
- Estonia has made its citizenship rules in such a way that people belonging to Russian minority find it difficult to get the right to vote.
- In Fiji, the electoral system is such that the vote of an indigenous Fiji has more value than that of an Indian-Fijian.

Democracy is based on a fundamental principle of political equality. That gives us the third feature of democracy: **in a democracy, each adult citizen must have one vote and each vote must have one value**. We shall read more about it in Chapter 3.

AP SCERT

தேர்தலில் போட்டியிட்டன. ஆனால் எப்போதும் வெற்றிபெறவில்லை. P.R.I தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பல மோசமான நுணுக்கங்களை செய்தது. அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுபவர்களெல்லாம் கட்சி கூட்டங்களுக்கு வந்தே தீரவேண்டும். அரசாங்க பள்ளிகளின் ஆசிரியர்கள் P.R.Iக்கு வாக்களிக்க வேண்டுமென பெற்றோரைக் கட்டாயப்படுத்தினர். எதிர் அரசியல் கட்சிகளை விமர்சிப்பதைத தவிர அவற்றின் செயற்பாடுகளை ஊடகங்கள் பெரிதாக கண்டுகொள்ள வில்லை. சில சமயங்களில் வாக்களிக்கும் மையங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றியதால் மக்களுக்கு வாக்களிப்பதில் சிரமம் ஏற்பட்டது. P.R.I தன் வேட்பாளர்களுக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்டு அதிக அளவு செலவு செய்தது.

மேலே விவரிக்கப்பட்ட தேர்தல்களை மக்கள் தங்கள் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு எடுத்துக்காட்டுகளாக கருதுலாமா? இந்த எடுத்துக்காட்டுகளைப் படித்தால் இவற்றை நாம் கணக்கில் கொள்ள இயலாது என்று தான் கூறுவோம். இங்கு பல பிரச்சினைகள் உள்ளன. சீனாவில் தேர்தல்கள் மக்களுக்கு எவ்வகையான தேர்விற்கும் வாய்ப்பு வழங்குவதில்லை. ஆளும் கட்சியையும் அது ஒப்புதல் அளித்த வேட்பாளர்களை மட்டுமே தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். இதை நாம் தேர்ந்தெடுத்தல் என்று கூற இயலுமா? மெக்சிகன் எடுத்துக்காட்டில் உண்மையில் மக்களுக்கு தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு உள்ளதாக காணப்படும். ஆனால் உண்மையில் அவர்களுக்கு தேர்ந்தெடுக்க வாய்ப்பு இல்லை மக்கள் எதிர்ப்பாக இருந்தாலும் ஆளுங்கட்சியை தோற்கடிக்கும் வாய்ப்பே இல்லை. இவை நியாயமான தேர்தல்கள் அல்ல.

மக்களாட்சி மீது நம் புரிதலுக்காக நாம் இரண்டாவது பண்பாக இணைக்கலாம். ஏதோ ஒரு வகையில் தேர்தல்கள் நடத்துவது சரியாகாது. பல்வேறு கட்சிகளுக்கிடையே தேர்ந்தெடுப்பதற்கு தேர்தல்கள் வாய்ப்பு வழங்கவேண்டும். மக்கள் விரும்பினால் இந்த தேர்தல் வாயிலாக தற்போதையஆட்சியாளர்களை நீக்குவதற்கு வாய்ப்பிருக்க வேண்டும் தற்போது ஆட்சியிலுள்ளவர்களும் தோற்க வாயப்பிருக்கும்படி நடக்கும் சுதந்திர பாரபட்சமற்ற தேர்தலே மக்களாட்சியின் அடிக்கல் மக்களாட்சி தேர்தல்கள் பற்றி நாம் 3 ஆம் அத்தியாயத்தில் அதிக அளவில் தெரிந்துகொள்ளலாம்.

©Nerilicon, *El Economista* , Mexico, Cagle Cartoons Inc. 17 May 2005

ஒரு நபர் ஒரு வாக்கு ஒரே மதிப்பு

மக்களாட்சிக்காக போராடுதல், வயதுவந்தோர் வாக்குரிமை கோரிக்கையுடன் எந்த அளவிற்கு பிணைந்துள்ளது என்பதை இதுவரை நாம் பயின்றோம். இந்த சூத்திரம் தற்போது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் ஓட்டுரிமையை நிராகரிப்பதற்கு சூழ்நிலைகள் அதிகமாக உள்ளன.

* 2015 வரை சௌதி அரேபியாவில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை.
* ரஷ்ய சிறுபான்மையின மக்கள் வாக்குரிமை பெறுவது கடினமாக இருக்கும்படி எஸ்தோனியா குடியுரிமை விதிமுறைகளை வடிவமைத்தது.
* பிஜியில் இந்திய பிஜியன் வாக்கினை விட உள்ளூர் பிஜிகுடிமகனின் வாக்கிற்கு அதிக மதிப்பிருக்கும்படி தேர்தல் முறை உள்ளது.

மக்களாட்சி அரசியல் சமத்துவம் என்னும் அடிப்படை சூத்திரத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளது. மக்களாட்சியில் ஒவ்வொரு வயது நிரம்பிய குடிமகனுக்கும் ஒரு வாக்கு இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வாக்கிற்கும் ஒரே மதிப்பு இருத்தல் வேண்டும் என்னும் மக்களாட்சியின் மூன்றாவது பண்பினை வழங்குகிறது. இதைப்பற்றி நாம் 3ஆம் அத்தியாயத்தில் விளக்கமாக கற்கலாம்.

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்

இந்த கேலிச்சித்திரம் 'மக்களாட்சியை ஏற்படுத்துதல்' என உள்ளது. இது முதலில் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வெளியானது. இங்குள்ள பணப்பைகள் எதை விளக்குகின்றன. இந்த கேலிச்சித்திரம் இந்தியாவிற்கு பொருந்துமா?

read the cartoon



©John Trever, *Albuquerque Journal*, US, Cagle Cartoons Inc.

This cartoon is about the Iraqi election held after Saddam Hussein's regime was overthrown. He is shown behind the bars. What is the cartoonist saying here? Compare the message of this cartoon with the first cartoon in this chapter.

Rule of law and respect for rights

Zimbabwe attained independence from White minority rule in 1980. Since then the country has been ruled by ZANU-PF, the party that led the freedom struggle. Its leader, Robert Mugabe, ruled the country since independence. Elections were held regularly and always won by ZANU-PF. President Mugabe was popular but also used unfair practices in elections. Over the years his government changed the constitution several times to increase the powers of the President and make him less accountable. Opposition party workers were harassed and their meeting disrupted. Public protests and demonstrations against the government were declared illegal. There was a law that limited the right to criticise the President. Television and radio were controlled by the government and gave only the ruling party's version. There were independent newspapers but the government harassed those journalists who went against it. The government ignored some court judgments that went against it and pressurised judges. He was forced out of office in 2017.

The example of Zimbabwe shows that popular approval of the rulers is necessary in a democracy, but it is not sufficient. Popular governments can be undemocratic. Popular leaders can be autocratic. If we wish to assess a democracy, it is important to look at the elections. But it is equally important to look before and after the elections. There should be sufficient room for normal political activity, including political opposition, in the period before elections. This requires that the state should respect some basic rights of the citizen. They should be free to think, to have opinions, to express these in public, to form associations, to protest and take other political actions. Everyone should be equal in the eyes of law. These rights must be protected by an independent

Why talk about Zimbabwe? I read similar reports from many parts of our own country. Why don't we discuss that?

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்

©John Trever, *Albuquerque Journal*, US, Cagle Cartoons Inc.

இக்கேலிச்சித்திரம் சதாம் உசேன் ஆட்சியை நீக்கிய பின் நடந்த ஈராக் தேர்தலை பற்றியது. அவர் சிறைக்குப்பின் இருப்பதாகக் காட்டப் பட்டார். கேலிசித்திரம் வரைபவர் இங்கு என்ன கூறுகிறார்? இக்கேலிச் சித்திர செய்தியை இந்த அத்தியாயத்தின்முதல் கேலிச் சித்திரத்துடன் ஒப்பிடவும்.

சட்டத்தின் ஆட்சி, உரிமைகளை மதித்தல்

ஜிம்பாப்வே 1980ல் வெள்ளை இன சிறுபான்மை ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. அப்போதிலிருந்து நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை வகித்த ZANU-PF கட்சியால் ஆட்சி செய்யப்பட்டது. அதன் தலைவர் ராபர்ட் முகாபே விடுதலை அடைந்தது முதல் நாட்டை ஆண்டார். தேர்தல்கள் ஒழுங்கான முறையில் நடந்தன. ZANU-PF கட்சியே எப்போதும் வென்றது. 'அதிபர் முகாபே மக்களின் ஆதரவை பெற்றார். ஆனால் தேர்தல்களில் அநீதி முறைகளையும் பின்பற்றினார். ஆண்டுகள் செல்லச் செல்ல அதிபரின் அதிகாரங்களை உயர்த்துவதற்கும் அவருடைய பொறுப்பினை குறைப்பதற்கும் அவருடைய அரசாங்கம் பலமுறை அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியது' எதிர்க்கட்சி செயல்வீரர்களை கொடுமைபடுத்தியது மட்டுல்லாமல் அவர்களுடைய கூட்டங்களை முடிவுக்கு கொண்டுவந்தார். அரசாங்கத்திற்கு எதிராக நடைபெறும் மக்கள் எதிர்ப்புகள், போராட்டங்கள் ஆகியவற்றை சட்டத்திற்கு புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டன. அதிபரை விமர்சிக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தும் சட்டம் இருந்தது. தொலைக்காட்சி, வானொலி ஆகியவை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டன. ஆளுங்கட்சியின் வாதங்களை மட்டுமே தெரிவித்தன. சுதந்திரமான செய்தித்தாள்கள் உள்ளன. ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக செயல்பட்ட நிருபர்களை அரசாங்கம் கொடுமைபடுத்தியது. அரசாங்கத்திற்கு எதிராக வெளியிடப்பட்ட சில நீதிமன்ற தீர்ப்புகளை அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை. நீதிபதிகள் மீது அழுத்தம் கொண்டுவந்தது. அவர் 2017ல் பதவியிலிருந்து பலவந்தமாக நீக்கப்பட்டார்.

மக்களட்சியில் ஆட்சியாளருக்கு மக்கள் ஆதரவு தேவை என்று ஜிம்பாப்வே எடுத்துக்காட்டு தெரிவிக்கிறது. ஆனால் அது மட்டும் போதாது. மக்கள் ஆதரவு பெற்ற அரசாங்கங்கள் மக்களாட்சி அடிப்படையிலானதாக இல்லாமல் இருக்கலாம். மக்கள் ஆதரவு பெற்ற தலைவர்கள் சர்வாதிகாரிகளாக இருக்கலாம். நாம் மக்களாட்சி கணிக்க வேண்டுமென கருதினால் அவற்றின் தேர்தல்களை உற்றுநோக்க வேண்டும். தேர்தலுக்கு முன்னர் மற்றும் தேர்தலுக்கு பின்னரும் உற்றுநோக்குதல் அவசியம். தேர்தலுக்கு முன் அரசியல்ரீதியாக எதிர்ப்பதுடன் பொதுவான அரசியல் செயல்பாடுகளுக்கு போதியளவு வாய்ப்பிருக்க வேண்டும். இதற்கு குடிமகனின் அடிப்படை உரிமைகளை அரசு மதித்தல் வேண்டும். அவர்கள் சிந்திப்பதற்கும் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும் அவற்றை வெளிப்படையாக எடுத்துரைப்பதற்கும், சங்கங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும், எதிர்ப்புகள், பிற அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சுதந்திரம் இருத்தல் வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமமே. ஒவ்வொருவரும் ஒப்புதலளித்து பின்பற்றும்

ஜிம்பாப்வே பற்றி எதற்கு விவாதிக்க வேண்டும். நமது நாட்டின் சில பகுதிகளிலும் இவ்வாறு நடக்கிறது என நான் படித்தேன். இதைப்பற்றி ஏன் விவாதிப்பதில்லை.



©Eric Allie, *Pioneer Press*, US, Cagle Cartoons Inc., 27 February 2006

judiciary whose orders are obeyed by everyone. We shall read more about these rights in Chapter 5.

Similarly, there are some conditions that apply to the way a government is run after the elections. A democratic government cannot do whatever it likes, simply because it has won an election. It has to respect some basic rules. In particular it has to respect some guarantees to the minorities. Every major decision has to go through a series of consultations. Every office bearer has certain rights and responsibilities assigned by the constitution and the law. Each of these is accountable not only to the people but also to other independent officials. We shall read more about this in Chapter 4.

Both these aspects give us the fourth and final feature of democracy: **a democratic government rules within limits set by constitutional law and citizens' rights**.

Summary definition

Let us sum up the discussion so far. We started with a simple definition that **democracy is a form of government in which the rulers are elected by the people**. We found that this definition was not adequate unless we explained some of the key words used in it. Through a series of examples we worked out four features of democracy as a form of government. Accordingly, democracy is a form of government in which:

- Rulers elected by the people take all the major decisions;
- Elections offer a choice and fair opportunity to the people to change the current rulers;
- This choice and opportunity is available to all the people on an equal basis; and
- The exercise of this choice leads to a government limited by basic rules of the constitution and citizens' rights.

read the cartoon

Chinese government blocked free flow of information on the internet by placing restrictions on popular websites like 'Google' and 'Yahoo'. The image of tanks and an unarmed student reminds the reader of another major event in recent Chinese history. Find out about that event.

AP SCERT



©Eric Allie, *Pioneer Press*, US, Cagle Cartoons Inc., 27 February 2006

NCERT

சுதந்திர நீதித்துறை வாயிலாக இவ்வுரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். இவ்வுரிமைகளைப் பற்றி 5வது அத்தியாயத்தில் மேலும் கற்கலாம். அதேபோல் தேர்தல்களுக்குப் பின் சில விதிமுறைகளுக்கு ஏற்பவேஅரசாங்கத்தை நடத்த வேண்டும். தேர்தல்களில் வெற்றி பெற்றுவிட்டாலே ஒரு மக்களாட்சி அரசாங்கம் தன் விருப்பத்திற்கே செயல்படக்கூடாது . அது சில அடிப்படை விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். குறிப்பாக சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட சில உறுதிமொழிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு முக்கிய முடிவும் சில தொடர்ச்சியான அறிவுறுத்தல்கள் வாயிலாக நடைபெறவேண்டும். ஒவ்வொரு அலுவலக ஊழியரும் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்டங்களில் ஒதுக்கப்பட்ட சில உரிமைகளையும் பொறுப்புகளையும் கொண்டிருப்பர். இவர்களில் ஒவ்வொருவரும் மக்களுக்கு மட்டுமின்றி ஒவ்வொரு அலுவலருக்கும் பொறுப்பு வகிப்பர். நாம் இதைப்பற்றி பாடம் 4ல் மேலும் கற்கலாம்.

இவ்விரு கூறுகளும் மக்களாட்சியின் நான்காம் அல்லது இறுதியான பண்பினை நமக்குத் தருகிறது. ஒரு மக்களாட்சி அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டத்தாலும் குடிமக்களின் உரிமைகளாலும் வடிவமைக்கப்பட்ட வரம்பிற்குள் ஆட்சி செய்யும்.

வரையறைச் சுருக்கம் :

நாம் இதுவரை கலந்துரையாடியதைச் சுருக்கமாகக் காணலாம். மக்களாட்சி என்பது மக்களால் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்க வடிவம் என்னும் பொதுவான வரையறையுடன் தொடங்கினோம். இதில் பயன்படுத்திய சில முக்கிய சொற்களை விளக்காவிட்டால் இவ்வரையறை முழுமையடையாது என்பதை நாம் கவனித்தோம். மக்களாட்சியின் நான்கு பண்புகளை நாம் பல்வேறு எடுத்துக் காட்டுகள் வாயிலாக தெரிவித்தோம். அதற்கேற்ப மக்களாட்சி என்பது ஒரு அரசாங்க முறை இதில்

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அனைத்து முக்கிய முடிவுகளையும் எடுப்பர்.
- தேர்தல்கள் தற்போதுள்ள ஆட்சியாளர்களை மாற்றுவதற்கு மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை வழங்குகிறது.
- இந்த வாய்ப்பு சமமான அடிப்படையில் மக்கள் அனைவருக்கும் கிடைக்கிறது;
- இதை செயல்படுத்துவதால் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் குடிமக்களின் உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படை விதிமுறைகளால் அரசாங்கம் வரம்பிற்குட்படுத்தப்படுவதற்கு வழி வகுக்கிறது.

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்

சீன அரசாங்கம் பிரபல வலைதளங்களான கூகுள், யாஹூ போன்றவற்றின் மீது தடைவிதித்து தகவல் எளிதில் பரிமாறப்படுவதைத் தடை செய்தது. இராணுவ டேங்குகள் மற்றும் ஆயுதமற்ற மாணவன் ஆகிய படம் வாசகருக்கு அண்மையில் நடந்த சீனாவின் மற்றொரு புதிய முக்கிய சம்பவத்தை நினைவூட்டுகிறது. அந்த நிகழ்வைக் கண்டுபிடி.

CHECK YOUR PROGRESS

Read these five examples of working or denial of democracy. Match each of these with the relevant feature of democracy discussed above.

Example	Feature
King of Bhutan has declared that in future he will be guided by the advice given to him by elected representatives.	Rule of law
Many Tamil workers who migrated from India were not given a right to vote in Sri Lanka.	Respect for Rights
The king imposed a ban on political gatherings, demonstrations and rallies.	One person one vote one value
The Indian Supreme Court held that the dissolution of Bihar assembly was unconstitutional.	Free and fair electoral competition
Political parties in Bangladesh have agreed that a neutral government should rule the country at the time of elections.	Major decisions by elected leaders

1.3 Why democracy?

An argument broke out in Madam Lyngdoh's class. She had finished teaching the previous section on what is democracy and asked the students if they thought democracy was the best form of government. Everyone had something to say.

Debating merits of democracy

Yolanda: We live in a democratic country. All over the world people want democracy. Countries that were not democratic earlier are becoming democratic now. All great people have said nice things about democracy. Isn't it obvious that democracy is the best? Do we need to debate this?

Tangkini: But Lyngdoh Madam had said we should not accept something just because it is famous, just because everyone else accepts it. Isn't it possible that everyone is following a wrong path?

Jeni: Yes, it actually is a wrong path. What has democracy brought to our country? Seven decades of democracy and there is so much poverty in the country.

Ribiang: But what has democracy got to do with it? Do we have poverty because we are democratic or do we have poverty despite being a democracy?

Jeni: Whatever, how does it make a difference? The point is that this can't be the best form of government. Democracy is all about chaos, instability, corruption and hypocrisy. Politicians fight among themselves. Who cares for the country?

Poimon: So, what should we have instead? Go back to the British rule? Invite some kings to rule this country?

Rose: I don't know. I think what this country needs is a strong leader, someone who does not have to bother about elections and parliament. One leader should have all the powers. He should be able to do whatever is needed in country's interest. That alone can remove corruption and poverty from this country.

Someone shouted: That is called **dictatorship**!

Hoi: What if that person starts using all these powers for himself and his family? What if he is corrupt himself?

Rose: I am speaking only of the honest, sincere and strong leader.

Hoi: But that is not fair. You are comparing a real democracy with an ideal dictatorship. We should compare an ideal with an ideal, the real with the real. Go and check the record of dictators in real life. They are most corrupt, selfish and brutal. It is just that we don't get to know about this. And what is worse, you can't even get rid of them.

I want to be in Lyngdoh Madam's class! That sounds like a democratic classroom. Doesn't it?

AP SCERT

உங்களுடைய முன்னேற்றத்தை சோதித்து கொள்ளுங்கள்

மக்களாட்சி நடைமுறையில் உள்ளதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு கீழ்க்காணும் ஐந்து எடுத்துக்காட்டுகளை படிக்கவும். மேலே கலந்துரையாடிய மக்களாட்சிப் பண்புகளின் அடிப்படையில் இவற்றை இணைக்கவும்.

எடுத்துக்காட்டு	பண்பு
எதிர்காலத்தில் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அறிவுரைப்படி தன் கடமைகளைச் செய்வேன் என்று பூட்டான் மன்னர் அறிவித்தார்.	சட்டத்தின் ஆட்சி
இந்தியாவிலிருந்து குடியேறிய பல தொழிலாளர்களுக்கு இலங்கையில் வாக்குரிமை வழங்கப்படவில்லை.	உரிமைகளுக்கு மரியாதை
அரசியல் மாநாடுகள், கூட்டங்கள், ஊர்வலங்கள் மீது அரசர் கட்டுப்பாட்டை விதித்தார்.	ஒரு நபர் ஒரு வாக்கு ஒரு மதிப்பு
பீகார் சட்டசபையைக் கலைத்தல் அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பானது என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியது.	சுதந்திரமான நேர்மையான தேர்தல் போட்டிகள்
தேர்தல் நேரங்களில் நடுநிலை அரசாங்க ஆட்சி நடைபெற வேண்டுமென்று வங்காள தேசத்தின் அரசியல் கட்சிகள் அங்கீகரித்தன	தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் முக்கிய முடிவுகள்

1:3 மக்களாட்சி எதற்கு?

மேடம் லிங்டோவின் வகுப்பறையில் ஒரு விவாதம் ஏற்பட்டது. மக்களாட்சி என்றால் என்ன? மக்களாட்சியே சிறந்த அரசாங்கமுறை என்று நீங்கள் கருதுகிறீர்களா? என்று தன் மாணவர்களை கேட்பதன் வாயிலாக முந்தைய பாடப்பிரிவில் அவர் தன் கற்பித்தலை முடித்தார். அனைவருக்கும் எதையோ கூறவேண்டுமென்று தோன்றியது.

மக்களாட்சியின் நன்மைகள் மீது விவாதம்:

யோலாந்தா! நாம் மக்களாட்சி நாட்டில் வாழ்கிறோம். உலக அளவில் மக்கள் மக்களாட்சியை விரும்புகிறார்கள். கடந்த காலத்தில் மக்களாட்சி அல்லாத நாடுகள் தற்போது மக்களாட்சி நாடுகளாக மாறிவருகின்றன. பெரிய தலைவர்கள் மக்களாட்சியைப் பற்றி சிறப்பான கருத்துகள் கூறினர். மக்களாட்சி என்பது மிகச் சிறந்தது என்பது புரியவில்லையா? இதைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டுமா?

டாங்கினி : அது பிரபலமானது எனவே, ஒவ்வொருவரும் அதை ஏற்றுக்கொண்டனர் எனவே நாம் அதை ஏற்க வேண்டிய அவசியமில்லை என்று லிங்டோ மேடம் கூறினார். அனைவரும் தவறான வழியைப் பின்பற்றி வந்திருக்கலாம் அல்லவா?

ஜெனி : ஆமாம், உண்மையில் இது தவறான வழிமுறையே. மக்களாட்சி நம் நாட்டிற்கு என்ன கொண்டுவந்தது? ஏழு பத்தாண்டுகால மக்களாட்சிக்கு பின்னரும் நாட்டில் அதிகளவில் ஏழ்மை உள்ளது.

ரிபியாங் : ஆனால் அதற்கும் மக்களாட்சிக்கும் தொடர்பு என்ன? நாம் மக்களாட்சியில் உள்ளதால் நமக்கு ஏழ்மை உள்ளதா? அல்லது மக்களாட்சி அடிப்படையில் இருந்தாலும் நமக்கு ஏழ்மை உள்ளதா?

ஜெனி : எப்படியிருப்பினும் அது வேறுபாடு எப்படி ஆகும்? எனது கருத்து என்னவெனில் இது சிறந்த அரசாங்க வடிவம் அல்ல. மக்களாட்சி முழுக்க குழப்பநிலை, உறுதித் தன்மையின்மை, அநீதி, கள்ளங்கபடம், அரசியல் தலைவர்கள் தங்களுக்குத் தாங்களே சண்டையிட்டுக் கொள்கின்றனர். நாட்டைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்?

போய்மான் : இதற்கு பதிலாக நமக்கு என்ன தேவை? மீண்டும் ஆங்கிலேயரிடம் ஆட்சி செய்யவேண்டுமா? இந்த நாட்டை ஆள்வதற்கு எந்த அரசரையாவது அழைக்க வேண்டுமா?

ரோஸ் : எனக்குத் தெரியாது, இந்த நாட்டிற்கு வலிமைவாய்ந்த ஒரு தலைவர் தேவை தேர்தல்கள், பாராளுமன்றத்துடன் அவசியமற்ற ஒரு நபர். ஒரு தலைவருக்கு அனைத்து அதிகாரங்களும் இருத்தல் வேண்டும். நாட்டின் நன்மைக்காக அவர் எதையும் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். அவரால் மட்டுமே நாட்டிலிருந்து அநீதி, ஏழ்மை ஆகியவற்றை விரட்ட இயலும்

யாரோ கத்தினர்:அதையே சர்வாதிகாரம் என்பர்.

ஹோரய் : அந்த நபர் இவ்வதிகாரங்கள் அனைத்தையும் தன் சுயநலத்திற்காகவும் தன் குடும்பத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளத் தொடங்கினால் என்னவாகும்? அவர் லஞ்சம் வாங்குபவராக இருந்தால்?

ரோஸ் : நான் நேர்மை மற்றும் சுயநலமற்ற வலிமையான தலைவரைப் பற்றி மட்டுமே பேசுகிறேன்!

ஹோரய் : ஆனால் அது சரியல்ல, நீ உண்மையான மக்களாட்சியை கற்பனையான சர்வாதிகாரத்துடன் ஒப்பிடுகிறாய்? ஆனால் நாம் இலட்சியத்தை இலட்சியத்துடனும், உண்மையை உண்மையுடனும் ஒப்பிட வேண்டும். உண்மையான வாழ்க்கையில் சர்வாதிகாரியின் ஆவணங்களைச் சென்று பார். அவர்கள் மிகவும் அநீதியாளர்கள், சுயநலவாதிகள் மற்றும் கொடியவர்களாவர். இவர்களைக் குறித்து தெரிந்து கொள்வதற்கு நமக்கு அது மட்டும் போதாது. இன்னும் மோசமான விஷயம் என்னவென்றால் அவர்களை உங்களால் விட்டு விலகவும் இயலாது.

நான் லிங்டோ மேடம் வகுப்பில் இருக்க விரும்புகிறேன் அது மக்களாட்சி வகுப்புபோல் காணப்படுகிறதல்லவா!

Madam Lyngdoh was listening to this discussion with interest. Now she stepped in: "I was delighted to see you all arguing so passionately. I don't know who is right and who is wrong. That is for you to settle. But I did feel that you all wanted to speak your mind. You may have felt very bad if someone tried to stop you or if someone punished you for saying what you felt. Would you be able to do that in a country that is not democratic? Is that a good argument for democracy?"

Arguments against democracy

This conversation has most of the arguments that we routinely hear against democracy. Let us go over some of these arguments:

- Leaders keep changing in a democracy. This leads to instability.
- Democracy is all about political competition and power play. There is no scope for morality.
- So many people have to be consulted in a democracy that it leads to delays.
- Elected leaders do not know the best interest of the people. It leads to bad decisions.
- Democracy leads to corruption for it is based on electoral competition.
- Ordinary people don't know what is good for them; they should not decide anything.

Are there some other arguments against democracy that you can think of? Which of these arguments applies mainly to democracy? Which of these can apply to misuse of any form of government? Which of these do you agree with?

Clearly, democracy is not a magical solution for all the problems. It has not ended poverty in our country and in other parts of the world. Democracy as a form of government only ensures that people take their own decisions. This does not guarantee that their decisions will be good. People can make mistakes. Involving the people in these decisions does lead to delays in decision making. It is also true that democracy leads to frequent changes in leadership. Sometimes this can set back big decisions and affect the government's efficiency.

These arguments show that democracy of the kind we see may not be the ideal form of government. But that is not a question we face in real life. The real question we face is different: is democracy better than other forms of government that are there for us to choose from?

Arguments for democracy

China's famine of 1958-1961 was the worst recorded famine in world history. Nearly three crore people died in this famine. During those days, India's economic condition was not much better than China. Yet India did not have a famine of the

read the cartoon

This cartoon is from Brazil, a country that has long experience of dictatorship. It is entitled "The Hidden Side of Dictatorship". Which hidden sides does this cartoon depict? Is it necessary for every dictatorship to have a hidden side? If possible, find this out about the dictators including Pinochet in Chile, Jaruzelski in Poland, Sani Abacha in Nigeria and Ferdinand Marcos in the Philippines.



©Osmani Simanca, Brazil, Cagle Cartoons Inc. 6 December 2004

AP SCERT

மேடம் லிங்டோ இவ்விவாதத்தை ஆவலுடன் கேட்டுக்கொண்டிருக்கிறார். தற்போது அவர் பதிலளித்தார். நீங்கள் அனைவரும் மிகவும் உற்சாகத்துடன் கலந்துரையாடுவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், யார் சரி, யார் தவறு என்பது எனக்குத் தெரியாது. அதை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் அனைவரும் உங்கள் மனதிலுள்ள கருத்தை கூற விரும்புகிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். யாரேனும் உங்களை தடுப்பதற்கு முயற்சித்தாலோ அல்லது நீங்கள் நினைத்ததை கூறியதற்கு உங்களை தண்டித்தால் உங்களுக்கு மிகவும் வலிப்பதாக இருந்திருக்கலாம். மக்களாட்சி அல்லாத நாட்டில் நீங்கள் அவ்வாறு செய்ய இயலுமா? மக்களாட்சிக்கு அது நல்ல விவாதமா?

மக்களாட்சிக்கு எதிரான விவாதங்கள்.

இந்த உரையாடலில் நாம் தினமும் கேள்வியுறும் மக்களாட்சிக்கு எதிரான விவாதங்கள் அதிகளவில் உள்ளன. இவ்விவாதங்களில் சிலவற்றை பயில்வோம்.

- மக்களாட்சியில் தலைவர்கள் மாறிக்கொண்டே இருப்பர். இது நிலையற்ற தன்மைக்கு வழிவகுக்கும்.
- மக்களாட்சி அரசியல் போட்டி, அதிகாரத்திற்காக நடக்கும் விளையாட்டு. நீதிநெறிமுறைக்கு இங்கு வாய்ப்பில்லை.
- மகக்ளாட்சியில் பலரை சந்திக்க வேண்டும் இது தாமதத்திற்கு வழிவகுக்கும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு மக்களின் நலன் தெரியாது. இது தீய முடிவுகளுக்கு வழி வகுக்கும். ஏனெனில் அது தேர்தல்களின் போட்டி மீது ஆதாரப்பட்டிருக்கும்.
- சாதாரண மக்களுக்கு எது நல்லது என்பது தெரியாது. எந்த முடிவையும் அவர்கள் விருப்பத்திற்கு விட்டுவிட முடியாது.
- மக்களாட்சிக்கு எதிராக நீங்கள் சிந்திக்கும் விவாதங்கள் இவ்வளவு உள்ளனவா? இவற்றில் எந்த விவாதம் மக்களாட்சிக்குப் பொருந்துகிறது? எவ்வகையான அரசாங்கமெனினும் தவறாக பயன்படுத்துவதற்கு இவற்றில் பொருந்தக் கூடியவை யாவை? இவற்றில் எதனுடன் நீங்கள் ஒத்துப்போவீர்கள்?

மக்களாட்சி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மாயாஜால தீர்வானது. இது நம் நாட்டிலும் உலகின் பல பகுதிகளிலும் ஏழ்மையை முடிவுக்கு கொண்டு வராது. ஒரு அரசாங்க வடிவமாக மக்களாட்சி மக்கள் தங்கள் முடிவுகளை தாங்களே எடுத்துக் கொள்ளுமாறு செய்கிறது. இது அவர்களின் முடிவுகள் நல்லவை என உறுதியளிக்காது.

மக்கள் தவறுகள் செய்யலாம். இம்முடிவுகளில் மக்கள் ஈடுபடுவதால் முடிவுகள் எடுப்பதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. மக்களாட்சி தலைமையில் தொடர்ந்து மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்பதும் ண்மையே. சில வேளைகளில் இது பெரிய முடிவுகளின் மீது பின்னோக்கித் தள்ளி அரசாங்கத்தின் திறமையை பாதிக்கும்.

இந்த விவாதங்கள் நாம் காணும் மக்களாட்சியினை சிறந்த அரசாங்க வடிவம் என்று காட்டாமல் இருக்கலாம். ஆனால் அன்றாட வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் வினா அதுவல்ல. நாம் எதிர்கொள்ளும் உண்மையான வினா வேறுபட்டது. நாம் தேர்வு செய்வதற்காக உள்ள பிற அரசாங்க முறைகளை விட மக்களாட்சி மேன்மையானதா?

மக்களாட்சிக்கு சாதகமான விவாதங்கள்

1958-1961களில் ஏற்பட்ட சீனாவின் பஞ்சம் உலக வரலாற்றில் பதிவான மிகவும் மோசமான பஞ்சமாகும். சுமார் மூன்று கோடி மக்கள் இப்பஞ்சத்தில் இறந்தனர். அந்த நாட்களில் இந்தியாவின் பொருளாதாரமும் சீனாவைக் காட்டிலும் சிறந்ததாக இல்லை. ஆனால் சீனாவில் ஏற்பட்ட பஞ்சம் போல் இந்தியாவில் இல்லை.

இக்கேலிச் சித்திரம் நீண்டகால சர்வாதிகார ஆட்சி அனுபவம் உள்ள பிரேசில் நாட்டுடன் தொடர்புடையது இதற்கு சர்வாதிகாரத் தன்மையின் மறைவான பக்கம் என்று பெயரிடப்பட்டது இக்கேலிச் சித்திரம் எந்த மறைக்கப்பட்ட பக்கத்தைக் காட்டுகிறது?ஒவ்வொரு சர்வாதிகாரஆட்சிக்கும் மறைவான பக்கம் உள்ளதா? முடிந்தால் சிலியின் பினோசெட் போலந்தின் ஜருஜெலஸ்கி நைஜீரியாவின் சானி அபடா மற்றும் பிலிப்பைன்சின் பெர்டிணான்ட் மார்கஸ் குறித்து கண்டறியவும்.

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்

©Osmani Simanca, Brazil, Cagle Cartoons Inc. 6 December 2004

kind China had. Economists think that this was a result of different government policies in the two countries. The existence of democracy in India made the Indian government respond to food scarcity in a way that the Chinese government did not. They point out that no large-scale famine has ever taken place in an independent and democratic country. If China too had multiparty elections, an opposition party and a press free to criticise the government, then so many people may not have died in the famine.

This example brings out one of the reasons why democracy is considered the best form of government. Democracy is better than any other form of government in responding to the needs of the people. A non-democratic government may and can respond to the people's needs, but it all depends on the wishes of the people who rule. If the rulers don't want to, they don't have to act according to the wishes of the people. A democracy requires that the rulers have to attend to the needs of the people. **A democratic government is a better government because it is a more accountable form of government**.

There is another reason why democracy should lead to better decisions than any non-democratic government. Democracy is based on consultation and discussion. A democratic decision always involves many persons, discussions and meetings. When a number of people put their heads together, they are able to point out possible mistakes in any decision. This takes time. But there is a big advantage in taking time over important decisions. This reduces the chances of rash or irresponsible decisions. **Thus democracy improves the quality of decision-making.**

What would have happened if India was not a democracy? Could we have stayed together as a single nation?

This is related to the third argument. **Democracy provides a method to deal with differences and conflicts**. In any society people are bound to have differences of opinions and interests. These differences are particularly sharp in a country like ours which has an amazing social diversity. People belong to different regions, speak different languages, practise different religions and have different castes. They look at the world very differently and have different preferences. The preferences of one group can clash with those of other groups. How do we resolve such a conflict? The conflict can be solved by brutal power. Whichever group is more powerful will dictate its terms and others will have to accept that. But that would lead to resentment and unhappiness. Different groups may not be able to live together for long in such a way. Democracy provides the only peaceful solution to this problem. In democracy, no one is a permanent winner. No one is a permanent loser. Different groups can live with one another peacefully. In a diverse country like India, democracy keeps our country together.

These three arguments were about the effects of democracy on the quality of government and social life. But the strongest argument for democracy is not about what democracy does to the government. It is about what democracy does to the citizens. Even if democracy does not bring about better decisions and accountable government, it is still better than other forms of government. **Democracy enhances the dignity of citizens**. As we discussed above, democracy is

AP SCERT

இரண்டு நாடுகளிலுள்ள பல்வேறு அரசாங்க முறைகளின் விளைவாக இது நடந்தது என்று பொருளாதார நிபுனர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் மக்களாட்சி இருப்பதால் உணவுப் பற்றாக்குறை மீது சீன அரசாங்கம் பதிலளிக்காமல் இந்திய அரசாங்கம் பதிலளித்தது. அவர்கள் பேரளவிலான பஞ்சம் தனித்த மற்றும் மக்களாட்சி நாட்டில் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டினர். சீனாவிலும் பலகட்சி தேர்தல் இருந்திருப்பின் அதாவது ஓர் எதிர்க்கட்சியும், அரசாங்கத்தை விமர்சிக்கும் அச்சு சுதந்திரம் இருந்திருப்பின் அப்போது பெரும்பாலான மக்கள் பஞ்சத்தால் மரணமடைந்திருக்க மாட்டார்கள்.

மக்களாட்சியை ஏன் சிறந்த அரசாங்க வடிவமெனக் கருதுகின்றனர் என்பதை இந்த எடுத்துக்காட்டு நமக்குத் தெரிவிக்கிறது. மக்களின் பிரச்சினைகளுக்கு செவிமடுப்பதில் மக்களாட்சி மற்ற அரசாங்க வடிவங்களை விட மேன்மையானது. மக்களாட்சி அல்லாத அரசாங்கம் மக்களின் தேவைகளுக்கு செவிமடுக்கலாம். செவிமடுக்காமலும் போகலாம். அது ஆட்சியாளர்களின் விருப்பு வெறுப்புகளின்மேல் ஆதாரப்பட்டுள்ளது, ஆட்சியாளர்களுக்கு விருப்பமில்லா விட்டால் அவர்கள் மக்களின் தேவைகளுக்கு செவிமடுக்கமாட்டார்கள். ஆட்சியாளர்கள் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று மக்களாட்சி கூறுகிறது. மக்களாட்சி அரசாங்கம் மேன்மையான அரசாங்கம். ஏனெனில் இது மிகவும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம்.

மக்களாட்சி அல்லாத அரசாங்கத்தை விட மக்களாட்சி சிறந்த முடிவுகளை எடுக்க இயலும் என்பது மற்றொரு காரணம் மக்களாட்சி சிறந்த முடிவுகளை எடுக்க இயலும் என்பது மற்றொரு காரணம். மக்களாட்சி என்பது அறிவுரை கேட்டல் கலந்துரையாடுதல் ஆகியவற்றின்மீது ஆதாரப்பட்டுள்ளது. ஒரு மக்களாட்சியின் முடிவில் எப்போதும் பல நபர்கள், விவாதங்கள், மாநாடுகள் இருக்கும். பல்வேறு நபர்கள் தங்கள் எண்ணங்களை பகிர்ந்துகொள்ளும்போது அவர்கள் எந்த முடிவில் தவறு ஏற்பட்டாலும் எடுத்துக்காட்டுவர். இதற்கு கால தாமதம் ஏற்படும். ஆனால் முக்கிய முடிவுகளுக்கு நேரம் எடுத்துக் கொள்வதால் அதிக நன்மை ஏற்படும். இது கரடு முரடான அல்லது பொறுப்பற்ற முடிவுகளை எடுப்பதை குறைக்கிறது.

இந்தியா மக்களாட்சியாக இல்லாமலிருந்தால் என்ன நடந்திருக்கும் ஒரே நாடாக சேர்ந்திருந்து இருப்போமா?

இவ்வாறு மக்களாட்சி முடிவுகளின் தரத்தை உயர்த்துகிறது. மக்களாட்சி வேற்றுமைகள் போராட்டங்களை எதிர்கொள்வதற்கு வாய்ப்பளிக்கிறது என்பது மூன்றாவது விவாதம். எந்த சமுதாயத்திலாகிலும் மக்களுக்கு கருத்து வேறுபாடுகள், விருப்பு வெறுப்புகள் இருக்கும். அற்புதமான சமுதாய பன்மயம், வேற்றுமை உள்ள நம் நாட்டில் இவ்வேறுபாடுகள் அதிக அளவில் இருக்கும். பல்வேறு பகுதிகளிலுள்ள மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுவர். பல்வேறு மதங்களை பின்பற்றுவர். பல்வேறு சாதிகளை சேர்ந்தவர்கள் உலகினை மிகவும் வேறுபாடுள்ளதாக காண்பர். வேறுபட்ட முக்கிய பண்புகளை கொண்டிருப்பர். ஒரு சமூகத்தின் முக்கியப் பண்புகள் மற்ற சமூகங்களுடன் வேறுபட்டிருக்கலாம். அதுபோன்ற முரண்பாட்டை எவ்வாறு தீர்ப்போம். கொடிய அதிகாரத்தின் மூலம் இந்த முரண்பாட்டை தீர்க்கலாம். அதிக ஆற்றல் மிக்க சமூகம் தன் ஆணைகளை பிறர் பின்பற்றும்படி செய்கிறது மற்றவர்கள் அதை ஏற்கவேண்டி உள்ளது. ஆனால் அது கோபத்திற்கும் அதிருப்திக்கும் வழிவகுக்கிறது. இம்முறையில் வேறுபட்ட சமூகங்கள் நீண்ட காலத்தில் இணைந்து வாழாது. மக்களாட்சியே இப்பிரச்சினைக்கு ஒரே ஒரு அமைதியான தீர்வினை அளிக்க இயலும். மக்களாட்சியில் யாரும் நிரந்தர வெற்றியாளர்கள் அல்லர். யாரு:ம் நிரந்த தோல்வியடைந்தவர்கள் அல்லர். பல்வேறு சமூகத்தினர் ஒருவரோடொருவர் அமைதியான முறையில் வாழலாம். இந்தியா போன்ற வேற்றுமை மிக்க நாட்டில் மக்களாட்சியே நம்மை ஒன்றுபடுத்தும்.

இம்மூன்று விவாதங்கள் அரசாங்க, சமுதாய வாழ்க்கை தரத்தின் மீது விளைவுகளைப் பற்றியது. ஆனால் மக்களாட்சி அரசாங்கத்திற்கு என்ன செய்கிறது என்பதை விட குடிமக்களுக்கு என்ன செய்கிறது என்பது மக்களாட்சிக்கு சாதகமான வலிமையான விவதமாகும். மக்களாட்சியின் மேன்மையான முடிவுகள், பொறுப்புமிக்க அரசாங்கத்தை கொண்டு வராவிட்டாலும் பிற அரசாங்க முறைகளை விட மேன்மையானது. மக்களாட்சி குடிமக்களின் கௌரவத்தை அதிகரிக்கிறது. நாம் மேலே விவாதித்ததைப் போன்று மக்களாட்சி அரசியல் சமத்துவம் என்னும் சூத்திரத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளது.

based on the principle of political equality, on recognising that the poorest and the least educated has the same status as the rich and the educated. People are not subjects of a ruler, they are the rulers themselves. Even when they make mistakes, they are responsible for their conduct.

Finally, democracy **is better than other forms of government because it allows us to correct its own mistakes**. As we saw above, there is no guarantee that mistakes cannot be made in democracy. No form of government can guarantee that. The advantage in a democracy is that such mistakes cannot be hidden for long. There is a space for public discussion on these mistakes. And there is a room for correction. Either the rulers have to change their decisions, or the rulers can be changed. This cannot happen in a non-democratic government.

Let us sum it up. Democracy cannot get us everything and is not the solution to all problems. But it is clearly better than any other alternative that we know. It offers better chances of a good decision, it is likely to respect people's own wishes and allows different kinds of people to live together. Even when it fails to do some of these things, it allows a way of correcting its mistakes and offers more dignity to all citizens. That is why democracy is considered the best form of government.

This cartoon was published in Canada just before its parliamentary elections of 2004. Everyone, including the cartoonist, expected the Liberal party to win once again. When the results came, the Liberal Party lost the elections. Is this cartoon an argument against democracy or for democracy?

read the cartoon

©Cam Cardow, *The Ottawa Citizen*, Canada, Cagle Cartoons Inc. 30 May 2004.

Rajesh and Muzaffar read an article. It showed that no democracy has ever gone to war with another democracy. Wars take place only when one of the two governments is non-democratic. The article said that this was a great merit of democracy. After reading the essay, Rajesh and Muzaffar had different reactions. Rajesh said that this was not a good argument for democracy. It was just a matter of chance. It is possible that in future democracies may have wars. Muzaffar said that it could not be a matter of chance. Democracies take decisions in such a way that it reduces the chances of war. **Which of the two positions do you agree with and why?**

CHECK YOUR PROGRESS

மிகவும் ஏழ்மையான, மிகக் குறைவான கல்வியாளர்கள் மற்றும் செல்வந்தர்கள் கல்வியாளர்கள் சமமான தகுதியை கொண்டிருப்பர் என்று இது தெரிவிக்கிறது. மக்கள் ஆட்சியாளர்களுக்கு கீழ்படிந்தவர்கள் அல்லர். அவர்களே ஆட்சியாளர்கள். அவர்கள் தவறு செய்தாலும் அவர்களின் செயல்களுக்கு அவர்களே பொறுப்பு வகிப்பர். இறுதியாக, மக்களாட்சி பிற அரசாங்க வடிவங்களை விட மேன்மையானது. ஏனெனில் இது தன் சுய தவறுகளை திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கிறது. நாம் மேலே கண்டவாறு மக்களாட்சியில் தவறுகள் நடைபெறாது என்று உறுதியளிக்க முடியாது. எந்த அரசாங்க வடிவமாயினும் அதற்கு உறுதியளிக்காது. மக்களாட்சியில் உள்ள நன்மை என்னவெனில் இதுபோன்ற தவறுகள் அதிககாலம் நீடிக்காது.

இத்தவறுகள் மீது வெளிப்படையான விவாதத்திற்கு வாய்ப்புள்ளது. தவறுகளை திருத்திக் கொள்ளவும் வாய்ப்புள்ளது.

இதை சுருக்கமாக பார்க்கலாம். மக்களாட்சியால் அனைத்தையும் பெற்றிட முடியாது. அனைத்து பிரச்சனைகளுக்கும் இதுவே தீர்வாகாது. ஆனால் பிற அரசியல் மாற்று ஆட்சி முறைகளைவிட மக்களாட்சி மேலானது. இது சிறந்த தீர்வினையும் வாய்ப்பையும் வழங்குகிறது. இது ஒரு நாட்டில் உள்ள அனைத்து வகை மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது. சில தேவைகளை நிறைவேற்ற முடியாவிட்டாலும், குடிமக்களை மதிக்கிறது. ஆதலால் மக்களாட்சி சிறந்த ஆட்சி முறையாக கருதப்படுகிறது.



© Sam Cardow, *The Ottawa Citizen*, Cagle Cartoons Inc. 30 May 2004.

இந்த கேலிச் சித்திரம் 2004ல் கனடாவில் பாராளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னர் அச்சிடப்பட்டன. சுதந்திர (Liberal) கட்சியினர் மீண்டும் வெற்றிபெறுவர் என கேலிச் சித்திரம் வரைந்தவர் முதல் அனைவரும் நம்பினர். முடிவுகள் வெளியிட்டபோது சுதந்திரக் கட்சி தோற்றுவிட்டது. இக்கேலிச் சித்திரத்திலுள்ள விவாதம் மக்களாட்சிக்கு சாதகமானதா? இல்லை எதிரானதா?

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்

ராஜேஷ் மற்றும் முஜாஃபர் ஒரு கதையைப் படித்தனர். எந்த மக்களாட்சியும் மற்றொரு மக்களாட்சியுடன் போரிடாது என்று அது தெரிவித்தது. இரண்டு அரசாங்கங்களில் ஒன்று மக்களாட்சியல்லாததாக இருந்தால் தான் போர்கள் நடைபெறும். இது மக்களாட்சிக்கு பெரிய நன்மை என்று அந்த கட்டுரைக் கூறுகிறது. கட்டுரையை படித்த பின்னர் இராஜேஷ், முஜபர் ஆகியோரின் கருத்துகள் வேறுபட்டிருந்தன. இது மக்களாட்சிக்கு சிறந்த விவாதம் அல்ல என்று இராஜேஷ் கூறினான். இது இயல்பாக நடைபெற்றது. எதிர்காலத்தில் மக்களாட்சிகளுக்கிடையே போர்கள் நடைபெறலாம். ஆனால் இது துளியளவும் இயல்பாக நடைபெறவில்லை என்று முஜாஃபர் கூறினான். போர் நடைபெறும் வாய்ப்பை குறைக்கும் விதமாக மக்களாட்சிகள் முடிவுகள் எடுக்கும். இந்த இரண்டில் எந்த விவாதத்தை நீ ஆதரிப்பாய்? ஏன்?

உங்களுடைய முன்னேற்றத்தை சோதித்து கொள்ளுங்கள்

This famous cartoon by R K Laxman comments on the celebrations of the fifty years of independence. How many images on the wall do you recognize? Do many common people feel the way the common man in this cartoon does?

read the cartoon

1.4 Broader meanings of democracy

In this chapter we have considered the meaning of democracy in a limited and descriptive sense. We have understood democracy as a form of government. This way of defining democracy helps us to identify a clear set of minimal features that a democracy must have. The most common form that democracy takes in our times is that of a representative democracy. You have already read about this in the previous classes. In the countries we call democracy, all the people do not rule. A majority is allowed to take decisions on behalf of all the people. Even the majority does not rule directly. The majority of people rule through their elected representatives. This become necessary because:

- Modern democracies involve such a large number of people that it is physically impossible for them to sit together and take a collective decision.
- Even if they could, the citizen does not have the time, the desire or the skills to take part in all the decisions.

This gives us a clear but minimal understanding of democracy. This clarity helps us to distinguish democracies from non-democracies. But it does not allow us to



©R.K. Laxman, *The Times of India*

புகழ்பெற்ற கேலிச் சித்திர ஓவியர் திரு.ஆர்.கே.லக்ஷ்மன் தன் கருத்தினை வெளிப்படுத்தினார். சுவரின் மீது எத்தனை சித்திரங்களை உன்னால் காணமுடிகிறது? இதில் உள்ள சாதாரண மனிதர்களைப் போல் சமுதாயத்தில் உள்ள சாதாரண மனிதர்கள் உள்ளனரா?

இக்கேலிச் சித்திரத்தைப் படிக்கவும்.

1.4 மக்களாட்சியின் விரிவான பொருள்:

இந்த அத்தியாயத்தில் நாம் மக்களாட்சியின் பொருளை வரம்பிற்குட்பட்ட விரிவான கருத்துகளுடன் பார்த்தோம். மக்களாட்சியை ஓர் அரசாங்கம் வடிவம் என்பதை நாம் புரிந்து கொண்டோம். மக்களாட்சியை வரையறை செய்வதற்கு இந்த முறை மக்களாட்சிக்கு இருக்கவேண்டிய குறைந்த பட்ச பண்புகளை அறிவதற்கு நமக்கு துணைபுரிகிறது. நம்முடைய காலத்தில் மக்களாட்சியின் பொதுவான வடிவம் பிரதிநிதித்துவ மக்களாட்சி, நீங்கள் ஏற்கனவே இதைப்பற்றி முந்தைய வகுப்பில் படித்தீர்கள். நாம் மக்களாட்சி என்று அழைத்துக்கொள்ளும் நாடுகளில் மக்கள் அனைவரும் ஆளமாட்டார்கள். பெரும்பான்மையானவர்கள் மக்கள் அனைவரின் தரப்பில் முடிவுகள் எடுப்பர். இப்பெரும்பான்மையினரும் நேரடியாக ஆளமாட்டார்கள். இப்பெரும் பான்மையானவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் வாயிலாக ஆள்வர்.

இது தேவையானது. ஏனெனில்....

- நவீன மக்களாட்சிகளில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் இயல்பாக அனைவரும் சேர்ந்து ஓரிடத்தில் அமர்ந்து கூட்டு முடிவு எடுப்பது இயலாத செயல்.
- ‘ அவ்வாறு செய்ய இயன்றாலும், குடி மக்களுக்கு அனைத்து முடிவுகளிலும் கலந்துகொள்வதற்கு நேரம், விருப்பம் அல்லது திறன்கள் இல்லை.

இது நமக்கு மக்களாட்சி பற்றி தெளிவான குறைந்தபட்ச விழிப்புணர்வை தருகிறது. மக்களாட்சிகளை மக்களாட்சி அல்லாத நாடுகளிலிருந்து வேறுபடுத்துவதற்கு இத்தெளிவுத் தன்மை நமக்கு துணைபுரிகிறது. ஆனால் மக்களாட்சிக்கும், ஒரு சிறந்த மக்களாட்சிக்குமிடையே உள்ள வேற்றுமையைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பைத் தராது. அரசாங்கத்தின் செயல்திறன்களை பொறுத்தே மக்களாட்சியை புரிந்து கொள்வதற்கு இது வாய்ப்பளிக்கும் அதற்கு மேல் கூறாது. இதற்காக நாம் மக்களாட்சியின்



©R.K. Laxman, The Times of India

distinguish between a democracy and a good democracy. It does not allow us to see the operation of democracy beyond government. For this we need to turn to broader meanings of democracy.

Sometimes we use democracy for organisations other than the government. Just read these statements:

- *"We are a very democratic family. Whenever a decision has to be taken, we all sit down and arrive at a consensus. My opinion matters as much as my father's."*
- *"I don't like teachers who do not allow students to speak and ask questions in the class. I would like to have teachers with democratic temperament."*
- *"One leader and his family members decide everything in this party. How can they talk of democracy?"*

These ways of using the word democracy go back to its basic sense of a method of taking decisions. A democratic decision involves consultation with and consent of all those who are affected by that decision. Those who are not powerful have the same say in taking the decision as those who are powerful. This can apply to a government or a family or any other organisation. Thus democracy is also a principle that can be applied to any sphere of life.

Sometimes we use the word democracy not to describe any existing government but to set up an ideal standard that all democracies must aim to become:

- *"True democracy will come to this country only when no one goes hungry to bed."*
- *"In a democracy every citizen must be able to play equal role in decision making. For this you don't need just an equal right to vote. Every citizen needs to have equal information, basic education, equal resources and a lot of commitment."*

If we take these ideals seriously, then no country in the world is a democracy. Yet an understanding of democracy as an ideal reminds us of why we value democracy. It enables us to judge an existing democracy and identify its weaknesses. It helps us to distinguish between a minimal democracy and a good democracy.

In this book we do not deal much with this expanded notion of democracy. Our focus here is with some core institutional features of democracy as a form of government. Next year you will read more about a democratic society and ways of evaluating our democracy. At this stage we just need to note that democracy can apply to many spheres of life and that democracy can take many forms. There can be various ways of taking decisions in a democratic manner, as long as the basic principle of consultation on an equal basis is accepted. The most common form of democracy in today's world is rule through people's elected representatives. We shall read more about that in Chapter 3. But if the community is small, there can be other ways of taking democratic decisions. All the people can sit together and take decisions directly. This is how Gram Sabha should work in a village. Can you think of some other democratic ways of decision making?

In my village the Gram Sabha never meets. Is that democratic?

ACTIVITY

Find out the total number of eligible voters in your assembly constituency and your parliamentary constituency. Find out how many people can fit into the largest stadium in your area. Is it possible for all the voters in your parliamentary or assembly constituency to sit together and have a meaningful discussion?

விரிவான பொருளை தெரிந்துகொள்ளவேண்டும்.

சில சமயங்களில் அரசாங்கத்திற்கு மட்டுமின்றி நிறுவனங்களுக்கு தொடர்பாகவும் மக்களாட்சி எனும் சொல்லை பயன்படுத்துவோம். கீழ்க்காணும் விளக்கங்களைப் படிக்கவும்.

- எங்களுடையது மிகவும் மக்களாட்சியடிப்படையிலான குடும்பம். முடிவு எடுக்கவேண்டிய போதெல்லாம் நாங்கள் அனைவரும் உட்கார்ந்து ஒருமித்த கருத்திற்கு வருவோம். எங்கள் தந்தையின் கருத்திற்கு உள்ள மரியாதையே என் கருத்திற்கும் உள்ளது.
- வகுப்பறையில் மாணவர்களை பேசவிடாத வினாக்களை கேட்கவிடாத ஆசிரியர்களை நான் விரும்பமாட்டேன். மக்களாட்சி குணம் கொண்ட ஆசிரியர்களை நான் விரும்புவேன்.
- ஒரு தலைவன், அவனுடைய குடும்ப உறுப்பினர்களே இக்கட்சியில் ஒவ்வொரு கருத்தையும் முடிவு செய்வர். அவர்கள் மக்களாட்சி பற்றி எவ்வாறு பேசுவர்?

மக்களாட்சி என்னும் சொல் முக்கியமாக முடிவுகள் எடுக்கும் முறையுடன் தொடர்புடையது இக்கருத்தை ஆராய்வோம். ஒரு மக்களாட்சி முடிவில் அந்த முடிவில் பிரபலமானவர் அனைவரிடமும் அறிவுரை பெறுதல் அவர்களின் ஒப்புதலைப் பெறுதல் ஆகியவை நடைபெறும். இந்த முடிவை எடுப்பதில் அதிக ஆற்றல் மிக்கவர்களுக்கும் குறைவான ஆற்றல் மிக்கவர்களுக்கும் ஒரே விதமான முக்கியத்துவம் தரப்படும். இது ஓர் அரசாங்கத்திற்கு, ஒரு குடும்பத்திற்கு அல்லது ஒரு நிறுவனத்திற்கும் பொருந்தும். எனவே மக்களாட்சி என்பது வாழ்க்கையில் எந்த பொருந்தும் சூத்திரமாகும். சில சமயங்களில் மக்களாட்சி என்னும் சொல்லை தற்போதுள்ள எந்த அரசாங்கத்தையும் விவரிப்பதற்கு அன்றி அனைத்து மக்களாட்சி நாடுகள் இலட்சியமாக வைத்துக்கொண்டு மாற்றம் அடையவேண்டிய ஒரு சிறந்த தரத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் பயன்படுத்துகிறோம்.

- எந்த தனி மனிதனும் பசியின்றி படுக்கைக்கு செல்லும்போது மட்டுமே இந்நாட்டில் உண்மையான மக்களாட்சி நீடிக்கும்.
- மக்களாட்சியில் ஒவ்வொரு குடிமகனும் முடிவு எடுப்பதில் சமமான பங்கினை வகிக்கவேண்டும். இதற்கு உங்களுக்கு வேண்டியது வாக்குரிமை மட்டுமல்ல. ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான தகவல் வசதி, அடிப்படைக் கல்வி, வளங்கள் சமமாக கிடைத்தல், முழு அர்ப்பணிப்பு ஆகியவை தேவை. நாம் இந்த இலட்சியங்களையே முக்கியமாக எடுத்துக்கொண்டால் உலகில் எந்த நாடும் மக்களாட்சி ஆகாது. ஆனால் மக்களாட்சியை ஒரு லட்சியமிக்கது என்று புரிந்து கொண்டால் நாம் மக்களாட்சிக்கு ஏன் இவ்வளவு மதிப்பளிக்கிறோம் என்பது புரியும். தற்போதைய மக்களாட்சியின் செயல்போக்கினையும் அதன் பலவீனங்களையும் தெரிந்துகொள்வதற்கு நமக்கு துணைபுரிகிறது. இது குறையுடைய மக்களாட்சிக்கும் சிறந்த மக்களாட்சிக்குமிடையே உள்ள வேறுபாட்டை அறிய துணைபுரிகிறது.

இந்த நூலில் மக்களாட்சி பற்றிய விரிவான பொருளை நாம் பார்க்கப்போவதில்லை. ஓர் அரசாங்க வடிவமாக மக்களாட்சியின் மீது இங்கு கவனம் செலுத்தப்படுகிறது வரும் ஆண்டில் நீங்கள் மக்களாட்சி சமுதாயம் பற்றியும், மக்களாட்சியை மதிப்பீடு செய்யும் முறைகளைப் பற்றியும் விரிவாக கற்கப் போகிறீர்கள்.

இந்த நிலையில் மக்களாட்சியனாது வாழ்க்கையின் பலதுறைகளுக்குப் பொருந்துவதால் மக்களாட்சியின் பல்வேறு வடிவங்களை பின்பற்றலாம் என்று நாம் கவனிக்கவேண்டும். சமமான அடிப்படையில் அறிவுரை பெறுதல் என்னும் அடிப்படை சூத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் வரை மக்களாட்சி முறையில் முடிவுகள் எடுப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் இருக்கலாம். இன்றைய உலகின் மக்களாட்சியின் மிகவும் பொதுவான வடிவம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வாயிலாக ஆளுதல் நீங்கள் அதைப்பற்றி மூன்றாம் அத்தியாயத்தில் விரிவாக கற்கலாம். ஆனால் சமூகம் சிறியதெனில் மக்களாட்சி சமூகம் முடிவுகள் எடுப்பதற்கு வேறு முறைகள் இருக்கலாம். மக்கள் அனைவரும் சேர்ந்து அமர்ந்து நேரடியாக முடிவுகளை எடுக்கலாம். கிராமத்தில் கிராம சபை இதே போன்று நடைபெறவேண்டும். முடிவுகள் எடுக்கும் மற்ற மக்களாட்சி வழிமுறைகள் பற்றி நீங்கள் சிந்திப்பீர்களா?

செயல்பாடு

உங்கள் சட்டமன்றத் தொகுதி, பாராளுமன்றத் தொகுதியில் தகுதி பெற்ற மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையைத் தெரிந்துக்கொள்ளவும், உங்கள் பகுதியில் மிகப்பெரிய விளையாட்டரங்குகளில் எத்தனை பேர் அமர முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்கள் பாராளுமன்ற அல்லது சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர்கள் அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்து பொருளுள்ள விவாதங்களை நடத்த இயலுமா?

எங்களுடைய கிராமத்தில் கிராமசபை எப்பொழுதும் கூடுவதில்லை. அது ஜனநாயகமா?

This also means that no country is a perfect democracy. The features of democracy that we discussed in this chapter provide only the minimum conditions of a democracy. That does not make it an ideal democracy. Every democracy has to try to realise the ideals of a democratic decision-making. This cannot be achieved once and for all. This requires a constant effort to save and strengthen democratic forms of decision-making. What we do as citizens can make a difference to making our country more or less democratic. This is the strength and the weakness of democracy: the fate of the country depends not just on what the rulers do, but mainly on what we, as citizens, do.

This is what distinguished democracy from other governments. Other forms of government like monarchy, dictatorship or one-party rule do not require all citizens to take part in politics. In fact most non-democratic governments would like citizens not to take part in politics. But democracy depends on active political participation by all the citizens. That is why a study of democracy must focus on democratic politics.

exercises

1 Here is some information about four countries. Based on this information, how would you classify each of these countries. Write 'democratic', 'undemocratic' or 'not sure' against each of these.

- **a** Country A: People who do not accept the country's official religion do not have a right to vote.
- **b** Country B: The same party has been winning elections for the last twenty years.
- **c** Country C: Ruling party has lost in the last three elections.
- **d** Country D: There is no independent election commission.

2 Here is some information about four countries. Based on this information, how would you classify each of these countries. Write 'democratic', 'undemocratic' or 'not sure' against each of these.

- **a** Country P: The parliament cannot pass a law about the army without the consent of the Chief of Army.
- **b** Country Q: The parliament cannot pass a law reducing the powers of the judiciary.
- **c** Country R: The country's leaders cannot sign any treaty with another country without taking permission from its neighbouring country.
- **d** Country S: All the major economic decisions about the country are taken by officials of the central bank which the ministers cannot change.

3 Which of these is **not** a good argument in favour of democracy? Why?

- **a** People feel free and equal in a democracy.
- **b** Democracies resolve conflict in a better way than others.
- **c** Democratic government is more accountable to the people.
- **d** Democracies are more prosperous than others.

AP SCERT

எந்த நாடும் முழுமையான மக்களாட்சி அல்ல என்பது இதன் பொருள். இந்த அத்தியாத்தில் நாம் விவரித்த மக்களாட்சியின் பண்புகள், மக்களாட்சியின் குறைந்தபட்ச சூழ்நிலைகளை மட்டுமே வழங்குகின்றன. இது ஒரு சிறந்த மக்களாட்சி என்று கருதவேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு மக்களாட்சியும் மக்களாட்சி முறையிலான முடிவு செய்யும் அதிகாரத்தின் இலட்சியங்களை அறிவதற்கு முயற்சிக்க வேண்டும். இது ஒரே முறையில் சாதிக்க இயலாது. மக்களாட்சி அடிப்படையிலான முடிவுகள் எடுக்கும் செயல் முறையை காப்பாற்றி வலிமைபெறச் செய்வதற்கு தொடர்ச்சியான முயற்சி தேவை. குடிமக்களாக நம் கடமைகளை செயற்படுத்தும் முறையை பொறுத்து நம் நாடு உயர்ந்த மக்களாட்சியா, தாழ்வான மக்களாட்சியா என்பது முடிவுசெய்யப்படும். இதுவே மக்களாட்சியின் வலிமை மற்றும் பலவீனம். ஒரு நாட்டின் எதிர்காலம் ஆட்சியாளர்களின் செயற்பாடுகளைப் பொருத்து மட்டுமின்றி குடிமக்களாக நாம் என்ன செய்கிறோம் என்பதன் மீது முக்கியமாக ஆதாரப்பட்டுள்ளது. இதுவே மக்களாட்சிக்கும், பிற அரசாங்கங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை தெரிவிக்கிறது. முடியாட்சி, சர்வாதிகாரம் ஒற்றைக் கட்சி ஆட்சி போன்ற பிற அரசாங்க வடிவங்களில் மக்கள் அனைவரும் அரசியலில் பங்குபெற வேண்டிய அவசியமில்லை. உண்மையில் பல்வேறு மக்களாட்சி அல்லாத அரசாங்கங்கள் தங்களுடைய குடிமக்கள் அரசியல் பங்குபெறக்கூடாது என்று கருதுகின்றன. குடிமக்கள் அனைவரும் அரசியலில் சுறுசுறுப்பாக பங்கேற்பதன் மீது மக்களாட்சியின் வெற்றி ஆதாரப்பட்டுள்ளது. எனவே மக்களாட்சி பற்றிய ஆய்வு மக்களாட்சி அரசியலின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

பயிற்சிகள்

1. இங்கு நான்கு நாடுகள் பற்றி சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. இத்தகவலின் அடிப்படையில் நீங்கள் இந்த ஒவ்வொரு நாட்டையும் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்? இவற்றில் ஒவ்வொன்றின் எதிரே மக்களாட்சி சார்ந்த, மக்களாட்சி சாரா அல்லது கூற இயலாது என்று எழுதவும்.
   - (அ) A நாடு நாட்டின் ஆட்சி மதத்தை ஏற்காதவர்களுக்கு வாக்குரிமை இல்லை.
   - (ஆ) B நாடு கடந்த 20 ஆண்டுகளாக தேர்தலில் ஒரே கட்சி வென்றது.
   - (இ) C நாடு கடந்த மூன்று தேர்தல்களில் ஆளுங் கட்சி தோற்றுவிட்டது.
   - (ஈ) D நாடு சுதந்திர தேர்தல் ஆணையம் இல்லை.
2. இங்கு நான்கு நாடுகள் பற்றி சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. இத்தகவலின் அடிப்படையில் நீங்கள் ஒவ்வொரு நாட்டையும் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள் இவற்றில் ஒவ்வொன்றின் எதிராக 'மக்களாட்சி சார்ந்த', மக்களாட்சி சாராத' அல்லது 'கூற இயலாது' என்று எழுதவும்.
   - (அ) P நாடு : இராணுவத்தலைமை அதிகாரி அனுமதியின்றி பாராளுமன்றம் இராணுவத்தை பற்றி சட்டம் இயற்றாது.
   - (ஆ) Q நாடு : நீதித் துறையின் அதிகாரங்களை குறைக்கும் சட்டத்தை பாராளுமன்றம் ஏற்காது.
   - (இ) R நாடு: நாட்டின் தலைவர்கள் அவர்களின் அண்டை நாட்டின் அனுமதியின்றி மற்றொரு நாட்டுடன் எவ்வித ஒப்பந்தம் மீதும் கையெழுத்திடாது
   - (ஈ) S நாடு : நாட்டைப் பற்றிய அனைத்து முக்கிய பொருளாதார முடிவுகளை மத்திய வங்கி அதிகாரிகள் எடுப்பர். இவற்றை அமைச்சர்களாலும் மாற்ற இயலாது.
3. கீழ்க்கண்டவற்றில் எது மக்களாட்சிக்கு சாதகமான விவாதம் அல்ல? ஏன்?
   - (அ) மக்களாட்சியில் மக்கள் சுதந்திரமாகவும், சமமாகவும் இருப்பர்.
   - (ஆ) மக்களாட்சிகள் மற்றவற்றைவிட மேன்மையான முறையில் போராட்டங்களை தீர்க்கின்றன.
   - (இ) மக்களாட்சி அரசாங்கம் மக்களுக்கு பொறுப்பு வகிப்பதில் சிறந்து விளங்குகிறது.
   - (ஈ) மக்களாட்சிகள் மற்றவற்றைவிட செல்வ வளமிக்கவை.

AP SCERT

exercises

4 Each of these statements contains a democratic and an undemocratic element. Write out the two separately for each statement.
  a A minister said that some laws have to be passed by the parliament in order to conform to the regulations decided by the World Trade Organisation (WTO).
  b The Election Commission ordered re-polling in a constituency where large-scale rigging was reported.
  c Women's representation in the parliament has barely reached 10 per cent. This led women's organisations to demand one-third seats for women.

5 Which of these is **not** a valid reason for arguing that there is a lesser possibility of famine in a democratic country?
  a Opposition parties can draw attention to hunger and starvation.
  b Free press can report suffering from famine in different parts of the country.
  c Government fears its defeat in the next elections.
  d People are free to believe in and practise any religion.

6 There are 40 villages in a district where the government has made no provision for drinking water. These villagers met and considered many methods of forcing the government to respond to their need. Which of these is **not** a democratic method?
  a Filing a case in the courts claiming that water is part of right to life.
  b Boycotting the next elections to give a message to all parties.
  c Organising public meetings against government's policies.
  d Paying money to government officials to get water.

7 Write a response to the following arguments against democracy:
  a Army is the most disciplined and corruption-free organisation in the country. Therefore army should rule the country.
  b Rule of the majority means the rule of ignorant people. What we need is the rule of the wise, even if they are in small numbers.
  c If we want religious leaders to guide us in spiritual matters, why not invite them to guide us in politics as well. The country should be ruled by religious leaders.

8 Are the following statements in keeping with democracy as a value? Why?
  a Father to daughter: I don't want to hear your opinion about your marriage. In our family children marry where the parents tell them to.
  b Teacher to student: Don't disturb my concentration by asking me questions in the classroom.
  c Employee to the officer: Our working hours must be reduced according to the law.

NCERT

4. இவ்விளக்கங்களில் ஒவ்வொன்றும் மக்களாட்சி, மக்களாட்சி அல்லாத கூறுகளைத் கொண்டுள்ளன. ஒவ்வொரு வாக்கியத்திற்கும் இரண்டினை தனித்தனியாக எழுதவும்.

(அ) உலக வணிக அமைப்பு (WTO) நிர்ணயித்த விதிமுறைகளுக்கேற்ப சில சட்டங்களை பாராளுமன்றம் ஒப்புக் கொள்ளவேண்டும் என ஓர் அமைச்சர் கூறினார்.

(ஆ) பேரளவில் தேர்தல் முறைகேடுகள் நடந்த சட்டமன்றத் தொகுதியில் மறு தேர்தல் நடத்தவேண்டுமென்று தேர்தல் ஆணையம் ஆணையிட்டது.

(இ) பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 10 சதவீதம் மட்டுமே உள்ளது.

(ஈ) இதனால் மகளிர் சங்கங்கள் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளன.

5. மக்களாட்சி நாட்டில் பஞ்சம் ஏற்படும் வாய்ப்பு குறைவாக உள்ளது என்று விவாதிப்பதற்கு இவற்றில் சரியான காரணம் அல்லாதது எது?

(அ) எதிர்க்கட்சிகள் பசி, பட்டினி இறப்பு மீது கவனம் செலுத்தும்படிச் செய்யும்.

(ஆ) சுதந்திர தகவல் அமைப்பு நாட்டின் பல்வேறு பகுதிகளில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளியிடும்.

(இ) அரசாங்கம் வரப்போகும் தேர்தலில் தோல்வி அடைவோம் என்னும் பயத்தில் உள்ளது. (ஈ) மக்கள் எந்த மதத்தையும் நம்புவதற்கும், பின்பற்றுவதற்கும் சுதந்திரம் பெற்றுள்ளனர்.

6. மாவட்டத்தில் 40 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவில்லை. இந்த கிராமங்கள் கூட்டம் கூடின. அவர்களின் தேவையை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொண்டுவர பல்வேறு முறைகளை சிந்தித்தன. இவற்றில் எது மக்களாட்சி முறை அல்ல?

(அ) குடிநீர் வாழும் உரிமையின் பாகம் என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தல்.

(ஆ) அனைத்து கட்சிகளுக்கும் செய்தி வழங்குவதற்கு அடுத்த தேர்தலை புறக்கணித்தல்.

(இ) அரசாங்க கொள்கைகளுக்கு எதிராக பொதுக்கூட்டங்களை நடத்துதல்.

(ஈ) குடிநீரைப் பெறுவதற்கு அரசாங்க அதிகாரிகளுக்கு பணம் செலுத்துதல்

7. அரசாங்கத்திற்கு எதிராக உள்ள கீழ்க்காணும் விவாதங்களுக்கு பதிலளிக்கவும்.

(அ) நாட்டின் இராணுவம் மிகவும் ஒழுக்கமான, அநீதியில்லா அமைப்பு, எனவே இராணுவம் நாட்டை ஆள வேண்டும்.

(ஆ) பெரும்பான்மையினரின் ஆட்சி என்பதற்கு அப்பாவி மக்களின் ஆட்சி என்று பொருள் சிறுஎண்ணிக்கையில் இருப்பினும், அறிவாளிகளின் ஆட்சியே நமக்குத் தேவை.

(இ) ஆன்மீக கருத்துகளில் நம்மை வழிநடத்த மதத் தலைவர்களை நாம் விரும்பினால், பின் அரசியலில் வழிநடத்தவும் நாம் ஏன் அவர்களை அழைக்கக்கூடாது? நாட்டை மதத் தலைவர்கள் ஆள வேண்டும்.

8. மக்களாட்சி ஒரு மதிப்பு என்று தெரிவிக்கும் வகையில் கீழ்க்காணும் விளக்கங்கள் உள்ளனவா? ஏன்?

(அ) தந்தை தன் மகளிடம்; உன் திருமணம் பற்றிய உன் கருத்தை நான் கேட்க விரும்பவில்லை. நம் குடும்பத்தில் பெற்றோர் கூறும் அறிவுரைப்படியே குழந்தைகள் திருமணம் செய்துகொள்கின்றனர்.

(ஆ) ஆசிரியர் மாணவனிடம் வகுப்பறையில் என்னிடம் வினாக்கள் கேட்டு எனக்கு கவனச்சிதறல் ஏற்படுத்த வேண்டாம்.

(இ) ஊழியர் அதிகாரியிடம்: சட்டப்படி எங்கள் பணிநேரத்தைக் குறைக்க வேண்டும்.

AP SCERT

exercises

9 Consider the following facts about a country and decide if you would call it a democracy. Give reasons to support your decision.

a All the citizens of the country have right to vote. Elections are held regularly.

b The country took loan from international agencies. One of the conditions for giving loan was that the government would reduce its expenses on education and health.

c People speak more than seven languages but education is available only in one language, the language spoken by 52 percent people of that country.

d Several organisations have given a call for peaceful demonstrations and nation wide strikes in the country to oppose these policies. Government has arrested these leaders.

e The government owns the radio and television in the country. All the newspapers have to get permission from the government to publish any news about government's policies and protests.

10 In 2004 a report published in USA pointed to the increasing inequalities in that country. Inequalities in income reflected in the participation of people in democracy. It also shaped their abilities to influence the decisions taken by the government. The report highlighted that:

- If an average Black family earns $ 100 then the income of average White family is $ 162. A White family has twelve times more wealth than the average Black family.
- In a President's election 'nearly 9 out of 10 individuals in families with income over $ 75,000 have voted. These people are the top 20% of the population in terms of their income. On the other hand only 5 people out of 10 from families with income less than $ 15,000 have voted. They are the bottom 20% of the population in terms of their income.
- About 95% contribution to the political parties comes from the rich. This gives them opportunity to express their opinions and concerns, which is not available to most citizens.
- As poor sections participate less in politics, the government does not listen to their concerns – coming out of poverty, getting job, education, health care and housing for them. Politicians hear most regularly about the concerns of business persons and the rich.

Write an essay on 'Democracy and Poverty' using the information given in this report but using examples from India.

Most newspapers have an editorial page. On that page the newspaper publishes its own opinions about current affairs. The paper also publishes the views of other writers and intellectuals and letters written by the readers. Follow any one newspaper for one month and collect editorials, articles and letters on that page that have anything to do with democracy. Classify these into the following categories:

- Constitutional and legal aspects of democracy
- Citizens' rights
- Electoral and party politics
- Criticism of democracy

AP SCERT

பயிற்சிகள்

9. நாட்டைப் பற்றிய இக்கீழ்க்கண்ட உண்மைகளை கவனிக்கவும். நீங்கள் அதை மக்களாட்சி என்று அழைப்பீர்களா? இல்லையா? என்பதை முடிவு செய்யவும். உங்களுடைய முடிவிற்கு ஆதரவு தருவதற்கு காரணங்களைத் தெரிவிக்கவும்

(அ) நாட்டிலுள்ள குடிமக்கள் அனைவருக்கும் வாக்குரிமை உள்ளது. தேர்தல்களை ஒழுங்கான முறையில் தவறாமல் நடத்துகின்றனர்.

(ஆ) நாடு பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கியது. கடன் தருவதற்கு அரசாங்கம், கல்வி, ஆரோக்கியம் மீதான தன் செலவுகளைக் குறைக்க வேண்டும் என்பது விதிமுறைகளில் ஒன்றாகும்.

(இ) மக்கள் ஏழு மொழிகளை விட அதிக மொழிகள் பேசுகின்றனர். ஆனால் கல்வி ஒரு மொழியில் மட்டுமே கற்பிக்கப்படுகிறது. அது ஒரு நாட்டின் 52 சதவீத மக்களால் பேசப்படும் மொழியாகும்.

(ஈ) இந்த முறைகளை எதிர்த்து நாட்டில் அமைதியான ஆர்பாட்டங்கள், நாட்டில் முழு அளவில் வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றிற்கு பல நிறுவனங்கள் அழைப்பு விடுத்தன. அரசாங்கம் இத்தலைவர்களை கைது செய்தது.

(உ) நாட்டில் வானொலி, தொலைக்காட்சி ஆகியவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. அனைத்து செய்தித்தாள்களும் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் எதிர்ப்புகள் பற்றிய செய்தியை வெளியிடவேண்டுமானால் அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும்.

10. 2004ல் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை அந்நாட்டில் அதிகரித்து வரும் சமமின்மைகளைக் குறிப்பிட்டது. வருமானத்தில் சமமின்மையின் தாக்கம் மக்களாட்சியில் மக்கள் ஈடுபடுவதில் பிரதிபலித்தது. அது அரசாங்கம் எடுத்த முடிவுகளை பாதிக்கும்படியாகவும் அவர்களின் திறன்களையும் வடிவமைத்தது.
அறிக்கை கீழ்க்காண்பவற்றை வலியுறுத்தியது.

- கருப்பு இன குடும்பத்தின் வருமானம் $ 100 இருந்தால் வெள்ளை இனத்தவரின் வருமானம் $ 162 ஆக இருத்தல் வேண்டும். ஒரு சராசரி கருப்பின குடும்பத்தின் வருமானத்தைவிட வெள்ளையினக் குடும்பத்தின் வருவாய் 12 மடங்கு அதிகமாக இருக்கும்.
- குடியரசுத் தலைவர் தேர்தலில் $ 75000 ஐவிட அதிக வருவாய் உள்ள குடும்பங்களின் 10 நபர்களில் 9 பேர் வாக்களித்தனர். இந்த நபர்கள் அவர்களில் வருவாய் அடிப்படையில் மக்கள் தொகையில் 20% உள்ளனர். மற்றொரு புறம் $ 1500ஐ விட குறைவான வருவாய் உள்ள குடும்பத்திலிருந்து பத்துபேரில் 5 பேர் மட்டுமே வாக்களித்தனர். வருவாய் அடிப்படையில் அவர்கள் மக்கள் தொகையில் கீழ்நிலை 20 ல் உள்ளனர்.
- அரசியல் கட்சிகளுக்கு சுமார் 95% உதவி செல்வந்தர்களிடமிருந்து வருகிறது. இது அவர்களின் கருத்துகள் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. பெரும்பாலான குடிமக்களுக்கு இந்த வாய்ப்புகள் கிடைப்பதில்லை.
- ஏழை மக்கள் அரசியலில் குறைவாக பங்குபெறுவதால் ஏழ்மையிலிருந்து விடுபடுதல், வேலைவாய்ப்பைப் பெறுதல், கல்வி, மருத்துவம், வீடுகள் போன்ற அவர்களின் பிரச்சினைகளை அரசாங்கம் செவிமடுப்பதில்லை. வியாபாரிகள். செல்வந்தர்களின் பிரச்சினைகளைப் பற்றி அரசியல் தலைவர்கள் மிகவும் சிரத்தையுடன் செவிமடுத்தனர். இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ள தகவலைப் பயன்படுத்தி, இந்தியாவிலிருந்து எடுத்துக்காட்டுகளைக் கொண்டு 'மக்களாட்சியும் ஏழ்மையும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதவும்.

பெரும்பாலான செய்தித்தாள்களில் தொகுப்பாசிரியர் பக்கம் உள்ளது. அந்த பக்கத்தில் செய்தித்தாள்கள் நடப்பு விவகாரங்களைப் பற்றிய தங்களுடைய சுயக்கருத்துகளை வெளியிடுகின்றன. இச்செய்தித்தாள்கள் பிற எழுத்தாளர்கள் மற்றும் அறிவாளிகள் கருத்துகளையும் வாசகர்களால் எழுதப்படும் கடிதங்களையும் வெளியிடுகின்றன. ஏதேனும் ஒரு செய்தித்தாளை ஒரு மாத காலம் வரை பின்பற்றவும். அப்பக்கத்தில் மக்களாட்சியுடன் தொடர்புடைய தொகுப்பாசிரியர் கட்டுரைகள் கட்டுரைகள், கடிதங்களைச் சேகரிக்கவும்.

- மக்களாட்சியின் அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான கூறுகள்
- குடிமக்களின் உரிமைகள்
- தேர்தல் மற்றும் கட்சி அரசியல்
- மக்களாட்சி மீதான விமர்சனங்கள்

AP SCERT

CHAPTER 2

CONSTITUTIONAL DESIGN

AP - SCERT

Overview

We noted in the previous chapter that in a democracy the rulers are not free to do what they like. There are certain basic rules that the citizens and the government have to follow. All such rules together are called constitution. As the supreme law of the country, the constitution determines the rights of citizens, the powers of the government and how the government should function.

In this chapter we ask some basic questions about the constitutional design of a democracy. Why do we need a constitution? How are the constitutions drawn up? Who designs them and in what way? What are the values that shape the constitutions in democratic states? Once a constitution is accepted, can we make changes later as required by the changing conditions?

One recent instance of designing constitution for a democratic state is that of South Africa. We begin this chapter by looking at what happened there and how the South Africans went about this task of designing their constitution. Then we turn to how the Indian Constitution was made, what its foundational values are, and how it provides a good framework for the conduct of citizens' life and that of the government.

M2M6U4

அத்தியாயம்- 2

அரசியலமைப்புச் சட்ட வடிவமைப்பு

AP SCERT

ஒரு கண்ணோட்டம்

மக்களாட்சியில் ஆட்சியாளர்கள் தங்களுடைய விருப்பப்படி ஆள்வதற்கு வாய்ப்பில்லை என்பதை கடந்த அத்தியாயத்தில் கண்டோம். இங்கு குடிமக்கள், அரசாங்கம் பின்பற்ற வேண்டிய சில அடிப்படை விதிமுறைகள் உள்ளன. இதுபோன்ற விதிமுறைகளின் அனைத்தினுடைய கூட்டத்தையே அரசியலமைப்புச் சட்டம் என்பர். நாட்டின் மிக உயர்ந்த சட்டமான அரசிலமைப்புச் சட்டம் குடிமக்களுக்கு உள்ள உரிமைகள், அரசாங்கத்தின் அதிகாரங்கள் மற்றும் அரசாங்கம் எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதையும் முடிவு செய்கிறது.

இவ்வத்தியாயத்தில் நாம் மக்களாட்சியில் அரசாங்க வடிவமைப்பைப் பற்றி சில அடிப்படை வினாக்களைக் கேட்கிறோம். நமக்கு அரசியலமைப்புச் சட்டம் ஏன் தேவை? அரசியலமைப்பு சட்டங்கள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டன? அவற்றை யார், எவ்வாறு வடிவமைக்கின்றனர்? மக்களாட்சி நாடுகளில் அரசியலமைப்புச் சட்டத்திற்கு வடிவினை வழங்கும் மதிப்புகள் யாவை? ஒருமுறை அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப பிற்காலத்தில் நம்மால் மாற்றங்களைச் செய்ய இயலுமா?

அண்மைக் காலத்தில் மக்களாட்சி நாட்டிற்கு அரசியலமைப்புச் சட்டத்தை தயாரித்துக்கொண்ட நாடாக தென்னாப்பிரிக்காவை எடுத்துக்காட்டாக கூறலாம். தென்னாப்பிரிக்காவில் என்ன நடந்தது என்பதையும் அங்குள்ள மக்கள் அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்துக் கொள்ளும் பணியை எவ்வாறு மேற்கொண்டனர் என்பதையும் உற்றுநோக்குவதன் மூலம் நாம் இவ்வத்தியாயத்தைத் தொடங்கலாம். இதன் பின்னர் இந்திய அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு வடிவமைக்கப்பட்டது. அதன் அடிப்படை மதிப்புகள் யாவை, குடிமக்களின் வாழ்க்கை முறைக்கு, சிறந்த அரசிலயமைப்புச் செயல்முறை எவ்வாறு துணைபுரிகிறது என்பதையும் தெரிந்து கொள்வோம்.

2.1 Democratic constitution in South Africa

Nelson Mandela

"I have fought against white domination and I have fought against black domination. I have cherished the ideal of a democratic and free society in which all persons live together in harmony and with equal opportunities. It is an ideal which I hope to live for and to achieve. But if needs be, it is an ideal for which I am prepared to die."

This was Nelson Mandela, being tried for treason by the white South African government. He and seven other leaders were sentenced to life imprisonment in 1964 for daring to oppose the apartheid regime in his country. He spent the next 28 years in South Africa's most dreaded prison, Robben Island.

1

A signboard emblematic of the tense relations of the apartheid era, 1953.



South Africa History Online

Struggle against apartheid

